பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி 15 செவ்வாய்க்கிழமை (31-07-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:247

# சர்வஜன வாக்கெடுப்பு திட்டமிட்டபடி நடக்குமா?

## கைவிடுவது குறித்து அரசு பரிசீலனையாம்

கொழும்பு,ஜூலை31

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் முன் வைக்கப்பட்டிருக்கும் சர்வஜன வாக்கெடுப்பு திட்டமிட்டபடி எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறுமா?**

**இது குறித்து முரண்பாடான தகவல்கள், சமிக்ஞைகள் பல தரப்புகளில் இருந்தும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.**

சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படாமல் இடைநடுவில் கைவிடப்படும்; அல்லது காலவரையறை குறிப்பிடப்படாது தள்ளிப் போடப்படும் - என்று விடயமறிந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி சில செய்தி நிறுவனங்கள் தகவல்கள் வெளியிடுகின்றன.

கடந்த பொதுத்தேர்தலுக்கு சற்று முன்னர் புதிய அரசமைப்பை நாடாளுமன்றத்தில் முன்வைக்க அப்போதைய சந்திரிகா அரசு, எப்பாடுபட்டாயினும் அந்த அரசமைப்பு நாடாளுமன்றத்தில்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சிஹல உறுமய சந்திப்பு

கொழும்பு,ஜூலை31

சர்வஜன வாக்கெடுப்பு முயற்சியைக் கைவிட்டு உடன் நாடாளுமன்றத்தைச் கூட்ட நடவடிக்கை எடுக்கும்படி சிஹல உறுமயவின் தூதுக்குழு ஜனாதிபதியிடம் கோரியது.

நேற்றுக் காலை ஜனாதிபதியைச் சந்தித்த சமயம் அந்தத் தூதுக்குழு இந்தக் கோரிக்கையை முன் வைத்ததாக செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கோரிக்கையை ஏற்று அரசு செயற்பட்டால் அரசுக்கு தாங்கள் ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதாகவும் அந்தக் குழுவில் இடம்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியுடன் இ.தொ.கா. இன்று சந்திப்பு

கொழும்பு,ஜூலை31

இ.தொ.காவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நேற்று இடம்பெறவிருந்த சந்திப்பு கடைசி நேரத்தில் ரத்து செய்யப்பட்டுள்ளதாக அந்தக் கட்சியின் பிரமுகரும் எம்.பியுமான எஸ். யோகராஜன் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு இன்று இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

(உ-3)

## சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிரான வழக்குகள் இன்று

கொழும்பு,ஜூலை31

சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பத்து மனுக்களும் இன்று ஒன்றாக விசாரணைக்கு எடுக்கப்படவிருக்கின்றன.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான நிஹால் ஜெயசிங்க, காமினி அமரதுங்க ஆகியோர் முன்னிலையில் இந்த மனுக்கள் விசாரணைக்கு எடுக்கப்படும்.

ஐ.தே.கட்சி, ரெலோ ஆகியவற்றின் ஆதரவாளர்கள் மற்றும் வாசுதேவ நாணயக்கார உட்பட பத்துப் பேர் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுக்களை ஒன்றாக விசாரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

(உ-3)

## சர்வஜன வாக்கெடுப்பின் பின்னரே புதிய அரசமைப்பு உருவாக்கப்படும்

### 3 மாதத்தினுள் அது நடைமுறைக்கு வரும் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு,ஜூலை31

அடுத்தமாதம் 21 ஆம்திகதி சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி மக்களின் ஆணையைப் பெற்ற பின்னர் -

மகாநாயக்கர்கள், புத்திஜீவிகள், பொதுமக்கள் ஆகியோருடன் கலந்துரையாடி அவர்களின் கருத்தைப் பெற்று புதிய அரசமைப்பை உருவாக்குவேன். அந்த அரசமைப்பை சர்வஜன வாக்கெடுப்பு நடந்து மூன்று மாத காலத்துக்குள் நடைமுறைப்படுத்துவேன்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று மாலை வங்கி மற்றும் தோட்டத் தொழிற் சங்க சம்மேளனப் பிரதிநிதிகளுடன் நடத்திய கலந்துரையாடலிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அங்கு உரையாற்றிய ஜனாதிபதி மேலும் கூறியதாவது:-

புதிய அரசஅமைப்பு நடைமுறைக்கு வந்த பின்னர் தற்போதைய தேர்தல்முறை மாற்றப்பட்டு, இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பலம் வாய்ந்த அடித்தளம் இடப்படும்.

சர்வஜன வாக்கெடுப்பு அரசியல், கட்சிகளுக்கு அப்பாற்பட்டது. எதிர்காலம் என்ற வேட்பாளரே சர்வஜன வாக்கெடுப்பில் நிறுத்தப்படுவார். எதிர்காலம் ஒளிமயமானதாக அமைய அந்த வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும்.

தமிழ்மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய அரசமைப்புக்கு

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பழ.நெடுமாறன் ஏற்பாடு செய்யும் ஈழத் தமிழர் ஆதரவு மாநாட்டுக்கு அனுமதி வழங்க நீதிமன்றம் பணிப்பு

சென்னை,ஜூலை31

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் தமிழகத்தில் ஈழத தமிழர் ஆதரவு எழுச்சி மாநாட்டை நடத்துவதற்கு அனுமதி வழங்கும்படி தமிழக அரசுக்கு, சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த ஆண்டு கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் ஈழத்தமிழர் ஆதரவு எழுச்சி மாநாட்டை நடத்த பழ.நெடுமாறன் திட்டமிட்டிருந்தார். ஆரம்பத்தில் இந்த மாநாட்டுக்கு தமிழகப் பொலீஸ் அனுமதி வழங்கியது. ஆனால் பின்னர், அப்போதைய திமுக அரசு மாநாடு நடத்தத் தடைவிதித்தது.

தமிழக அரசின் இந்த முடிவை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் பழ. நெடுமாறன் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

அந்த மனு மீதான விசாரணையின் முடிவிலேயே நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

ஈழத்தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த திகதி காலம் கடந்து விட்டபோதிலும், பழ.நெடுமாறன் தனக்கு வசதியான திகதியில் மாநாட்டை நடத்த தமிழக அரசு அனுமதியளிக்க வேண்டும என்று நீதிமன்ற உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-ஓ-9)

## கட்டுநாயக்காத் தாக்குதலில் 28 விமானங்கள் இழப்பு என 'ஈழநாதம்' பத்திரிகை கூறுகிறது

வவுனியா,ஜூலை31

கட்டுநாயக்காவில் கடந்த செவ்வாய் விடிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 18 வான்கலங்கள் முற்றாக அழிக்கப்பட்டதாகவும் பத்து விமானங்கள் பெருமளவு சேதத்துக்குள்ளானதாகவும் புலிகளின் கட்டுப்பாட்டில் இயங்கும் 'ஈழநாதம்' பத்திரிகை தனது செய்தியில் தெரிவித்திருக்கின்றது.

கொழும்புத் தகவல்களை மேற்கோள்காட்டி அந்தப் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

இந்தத் தாக்குதலின் மூலம் விமானப்படையின் குண்டுவீச்சு வலிமை நாற்பத்தியைந்து சதவீதம் அழிக்கப்பட்டிருக்கின்றது. குண்டுவீச்சு நடவடிக்கைகளுக்காகப் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட 'டென் ஸ்குவாட்ரன்' (Ten-Squardron) விமான அணியின் எட்டு 'மிக் - 27' ஜெட் விமானங்களில் இரண்டும், 13 'கிபிர்' விமானங்களில் நான்கும் அழிக்கப்பட்டுவிட்டன; நான்கு கிபிர் விமானங்கள் செயலிழக்க வைக்கப்பட்டுள்ளன.

விமானப் படையின் உள்கட்டமைப்புக்கும் பெரும் சேதம் ஏற்பட்டிருக்கின்றது. மிக அபாயகரமான - உயர்ரக - வெடிகுண்டுகள் மற்றும் வெடிபொருள்கள், விமானங்கள் வீசும் பேரழிவைத் தரும் குண்டுகள் ஆகியவற்றைக் கொண்டிருந்த வெடிகுண்டுக் களஞ்சியமும் தகர்க்கப்பட்டுள்ளது.

விமானப் படைத்தளத்தில் இருந்த ஆயுதக் களஞ்சியமும் தகர்த்தழிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியில் தமது அரசு மீது ஏற்படக் கூடிய அவநம்பிக்கை மற்றும் சிங்கள மக்களின் கிளர்ச்சி ஆகியவற்றுக்கு அஞ்சி ஸ்ரீலங்கா அரசு உண்மைகளை மறைத்து பொய்யான தகவல்களை வெளியிடுகின்றது.

- இப்படி 'ஈழநாதம்' பத்திரிகை மேலும் தெரிவித்திருக்கின்றது. (உ)

## 'றான்' அமைப்புக்கு எதிராக யாழ்.வர்த்தகர்கள் சீற்றம்!

### கடையடைப்பு, ஆர்ப்பாட்ட முஸ்தீபு

யாழ்ப்பாணம்,ஜூலை31

1995 ஆம் ஆண்டு இடம்பெயர்வின் போது பாதிக்கப்பட்ட அறுநூறுக்கும் மேற்பட்ட வர்த்தகர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் விவகாரத்தை வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வுச் சபையினர் ('றான்') இழுத்தடித்து வருவதைக் கண்டித்து ஒரு நாள் கடையடைப்பையும் ஆர்ப்பாட்டப் பேரணியையும் நடத்த யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் முடிவு செய்துள்ளது.

கடந்த 22 ஆம் திகதி நடந்த சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் இது தொடர்பாக ஆராயப்பட்டதாகவும் -

எதிர்வரும் 5 ஆம் திகதி கூடி போராட்டம் நடைபெறும் திகதி குறித்து முடிவு செய்வது எனத் தீ

(13 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இரு சிப்பாய்கள் புலிகளின் தாக்குதலில் பலி!

கொழும்பு,ஜூலை31

வவுனியா இரணை இலுப்பைக் குளம் பகுதியில் நேற்றுமுன்தினம மாலை 5 மணியளவில் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் மறைந்திருந்து தாக்கியதில் இரு சிப்பாய்கள் கொல்லப்பட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் நேற்று மதியம் வெளியிட்ட களநிலை வர அறிக்கை தெரிவித்தது.

இந்தத் தாக்குதலில் பல ஆயுத தளபாடங்களைத் தாங்கள் கைப்பற்றியுள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அதேவேளை -

மட்டக்களப்பு மாவட்டத்தில் அக்கரைப்பற்றில் விசேட அதிரடிப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேற்று இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றில் விடுதலைப் புலிகள் உறுப்பினர் இருவர் உயிரிழந்ததாகவும் -

இரு சயனைட் வில்லைகள், ஒரு கைக்குண்டு, ரி-56 ரகத் துப்பாக்கி ஒன்று என்பன மோதல் நடந்த இடத்திலிருந்து படையினரால் பின்னர் கண்டெடுக்கப்பட்டதாகவும் -

தகவல் மையம் மேலும் தெரிவித்தது.

(உ-ஓ-9)

## பொலன்னறுவையில் விவசாயி பலி

கொழும்பு,ஜூலை31

பொலன்னறுவை மாவட்டம் கலவாடிய பகுதியில் அடையாளம் தெரியாதவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் எம்.ஜி. பண்டிதரத்ன என்ற 45வயது விவசாயி உயிரிழந்தார்.

வயல்களில் இரவுக் காவல் பணியை முடித்துவிட்டு அதிகாலை 6 மணியளவில் தமது வீடுகளுக்கு 4 விவசாயிகள் திரும்பிக் கொண்டிருந்ததாகவும் -

அப்போது அவர்கள் மீது இனம் தெரியாத சிலர் துப்பாக்கியால் சுட்டதாகவும் -

விவசாயிகள் நால்வரும் உயிர் தப்ப ஓடிய போதும், பண்டிதரத்ன சூட்டுக்கு இலக்காகி இறந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் உயிர் தப்பியவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் அரலகன்வில பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

விடுதலைப் புலிகள் சுட்டதிலேயே விவசாயி கொல்லப்பட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தனது நேற்றைய களநிலைவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

(உ-ஓ)

## பலஸ்தீனத்தில் யூதக்கோயில் கட்ட முயற்சி
# மேற்குக்கரைப் பிரதேசங்களில் வன்முறை வெடிக்கும் அபாயம்!

ஜெருசலேம்,ஜூலை31

மேற்குக் கரையில் பலஸ்தீனப் பகுதியில் யூத ஆலயமொன்றுக்கான அடிக்கல்லை நாட்டும் இஸ்ரேலிய வலது சாரிகளின் முயற்சியால் பலஸ தீனர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்கு மிடையிலான மோதல்கள் மீண்டும் உச்சக் கட்டத்தை அடையும் நிலை தோன்றியுள்ளது.

கடந்த செப்ரெம்பரில் அப்போது இஸ்ரேலிய எதிர்க்கட்சித் தலைவ ராக இருந்த, தற்போதைய இஸ்ரே லியப் பிரதமர் ஏரியல் ஷெரோன், பலஸ்தீனரின் மலைக்கோயிலுக்கு விஜயம் செய்ததையடுத்து மூண்ட வன்முறைகள் போன்று, அடிக்கல் நாட்டும் விடயம், மேற்குக் கரையில் நிலைமையை மோசமாக்கும் என்று கருதப்படுகிறது.

இஸ்ரேலிய வலதுசாரிகளின் யூதக் கோயில் நிர்மாண அறிவிப்பையடுத்து, இஸ்லாமியர்களின் புனிதப் பகுதிக ளைக் காப்பாற்ற அணி திரளுமாறு அரேபிய இஸ்லாமியத் தலைவர்கள் அறைகூவல் விடுத்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை, வலதுசாரி கள் பாதுகாப்பு அரண்களை தாண் டிச் செல்ல முயன்ற போதும், பொலீ ஸார் அவர்களின் முயற்சிகளை தடுத்துவிட்டனர்.

ஆனாலும் யூதக் கோயிலுக்கான அடிக்கல்லை நாட்டியே தீருவோ மென்று இஸ்ரேலிய வலது சாரிகள் உறுதியாக இருப்பதால்; மேற்குக் கரைப்பகுதியில் எப்போது வேண்டு மானாலும் நிலைமை மோசமாகலாம் என்று சர்வதேச தரப்பிலிருந்து அச் சம் வெளியிடப்பட்டுள்ளது. (ஒ)

## இஸ்ரேலிய டாங்கித் தாக்குதலில் ஆறு பலஸ்தீனர்கள் உயிரிழப்பு!

ஜெருசலேம்,ஜூலை31

மேற்குக்கரை ஜெனின் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இஸ் ரேலின் தாக்குதலில் 6 பலஸ்தீனர் கள் உயிரிழந்தனர்.

இஸ்ரேல் இராணுவத்தினர் டாங் கிகளில் இருந்து கண்மூடித்தனமா கத் தாக்குதல் நடத்தினர் என்றும் -

அதனால் ஒரே வீட்டில் இருந்த இந்த ஆறு பேரும் உயிரிழந்தனர் என்றும் -

பலஸ்தீனத் தலைவரின் பாதுகாப் படையைச் சேர்ந்த உறுப்பினர்களே கொல்லப்பட்டவர்கள் என்று பலஸ் தீனத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஜெருஸலத்தில் உள்ள இஸ் ரேலிய நிலைகள் மீது தாக்குதல் நடத்த இவர்கள் திட்டமிட்டு வந்த தாக இஸ்ரேல் இராணுவம் கூறியது. (ஒ)

## பங்களாதேஷில் அரசியல் வன்முறை சிறுவன் உட்பட மூன்று பேர் பலி!

டாக்கா,ஜூலை31

பங்களாதேஷில் பிரதான அரசி யல் கட்சிகளின் தொண்டர்கள் நடத் திய துப்பாக்கிச் சமரில் ஒரு சிறுவன் உட்பட 3 பேர் உயிரிழந்தனர்.

அவாமி லீக், பங்காளாதேஷ் தேசிய கட்சி ஆகியவற்றின் மாணவர் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் தென் கிழக்கு மாவட்டமான பெமியில் மோதிக் கொண்டதாகவும் -

அப்போது நடந்த குண்டு வீச்சு கள் மற்றும் துப்பாக்கிப் பிரயோகத் தில் மூவர் உயிரிழந்ததுடன், 5 பேர் காயமடைந்ததாகவும் - பொலீஸார் தெரிவித்தனர். பங்களாதேஷில் விரை வில் பொதுத் தேர்தல் நடைபெற உள்ள சமயத்தில் இடம்பெற்ற மோச மான அரசியல் மோதல் இது என்று கூறப்படுகிறது.

தலைமை நீதிபதி தலைமையி லான காபந்து அரசு, இதுவரை 26 ஆயிரம் பேரை கைது செய்து, ஆயி ரத்து ஐநூறு சட்ட விரோத துப்பாக் கிகளைக் கைப்பற்றியும், அரசியல் ரீதியான வன்முறைகளை கட்டுப்படுத்த முடியவில்லை. பங்களாதேஷில் தற் போது சுமார் இரண்டரை இலட்சம் சட்ட விரோத ஆயுதங்கள் இருப்ப தாகக் கூறப்படுகிறது. (ஒ-4)

### ஈரானியப் பெண்களிடையே தற்கொலை அதிகரிப்பு!

தெஹ்ரான்,ஜூலை31

ஈரானின் மேற்குப் புற மாகாண மான இலாமில் தற்கொலை செய்து கொள்ளும் அல்லது தற்கொலைக்கு முயற்சிக்கும் பெண்களின் எண் ணிக்கை அதிகரித்து வருவதாக ஈரா னிய பத்திரிகை செய்தி வெளியிட் டுள்ளது.

### உலக அரங்கில்

மிகச் சிறிய வயதிலேயே கட்டா யத் திருமணம் செய்து வைக்கப்படும் பெண்கள் தொடர்ந்து பல குழந்தை கள் பெறுவது குடும்பப் பொறுப்பு, பொருளாதாரப் பற்றாக்குறை போன்ற காரணங்களால் மன அழுத்தத்துக்கு உள்ளாகி தற்கொலை செய்து கொள் வதாகத் தெரிவிக்கப்பட்டது.

### இலங்கையில் படப்பிடிப்பு

திரைப்பட இயக்குநர் மணிரத்தி னம் தனது அடுத்த படத்தின் படப் பிடிப்பை இலங்கையில் நடத்தவிருப் பதாகத் தெரிவித்துள்ளார்.

'கன்னத்தில் முத்தமிட்டால்' என்ற அந்தத் திரைப்படத்தில் மாதவன் கதாநாயகனாக நடிக்கிறார்.

காஷ்மீர் பிரச்சினை (ரோஜா), இந்து - முஸ்லிம் பிரச்சினை (பம் பாய்), அசாம் தீவிரவாத பிரச்சினை (உயிரே) ஆகிய சிக்கலான விடயங் கள் குறித்த கதைகளைத் திரைப் படமாக்கியவர் மணிரத்தினம் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

## விதவை என்ற சொல்லுக்கு காஷ்மீர் அரசு தடைவிதிப்பு

ஸ்ரீநகர்,ஜூலை,31

இந்தியாவின் ஜம்முகாஷ்மீரில் அரசு அலுவலகங்களில் விதவை (Widow) என்ற சொல்லைப் பயன் படுத்தக்கூடாது என்று காஷ்மீர் மாநில அரசு அறிவித்துள்ளது.

அதற்கு பதிலாக காலமானவ ரின் மனைவி (wife of hate) என்ற சொற் பதத்தை உபயோகிக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

காஷ்மீரில் இடம்பெற்று வரும் யுத்தத்தினால் இதுவரை 10ஆயிரத் துக்கும் அதிகமான பெண்கள் தமது கணவரை இழந்துள்ளனர்.

விதவை என்று குறிப்பிடும்போது, அந்தப் பெண்கள் மனரீதியாகப் பெரி தும் பாதிக்கப்படுவதாகவும் -

அத்துடன், விதவை என்ற சொல் நாகரிக சமுதாயத்துக்கு பொருத்த மற்றதாக உள்ளதாகவும் - பல மனித உரிமை அமைப்புகள் தெரி வித்த தையடுத்தே மாநில அரசு இந்த உத்த ரவைப் பிறப்பித்தது. (ஒ)

## பிரான்ஸ் அதிபர் மீது ஊழல் குற்றச்சாட்டுகள்

பாரீஸ்,ஜூலை31

பிரான்ஸ் அதிபர் ஜக் ஷிராக் அரசுப் பணத்தை முறை கேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டுக்கு உள ளாகியுள்ளார்.

தனது வெளிநாட்டுப் பயணங் களின் போது, பிரெஞ்ச் அரசின் இரக சிய நிதியிலிருந்து முறைகேடாகப் பணத்தைப் பெற்றுப் பயன்படுத்திய தாக எதிர்க்கட்சிகள் அவர் மீது குற ரஞ்சாட்டியுள்ளன. நாட்டின் நலனுக் காக, இரகசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் செலவீனங்களுக்கா கவே இரகசிய நிதி உருவாக்கப்பட் டது குறிப்பிடத்தக்கது.

இதே சமயம் -

18 ஆண்டுகளாக பரீஸ் நகர மேயராக ஷிராப் பதவியில் இருந்த போது, பரீஸ் மாநகராட்சியால் வழங் கப்பட்ட கட்ட ஒப்பந்தங்கள் குறித்து நாடாளுமன்றக் குழு விசாரணை நடத்தி வருகிறது.

இந்தக் குழுவிடம் ஷிராக்கின், சொத்து விவரங்களை ஒப்படைக்க வேண்டு மென்று தற்போது பிரான்ஸ் நாடாளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றி யுள்ளது. (ஒ)

## நாகா யுத்த நிறுத்தம் தொடர்பான
# மக்களின் போராட்டத்துக்கு இந்திய அரசு பணிந்தது

இம்பால்,ஜூலை31

இந்தியாவின் மணிப்பூர் மாநில மக்களின் போராட்டத்துக்கு பணிந்து, நாகா யுத்த நிறுத்தத்தை நாகலாந்து மாநிலத்துக்கு வெளியே நடைமுறைப் படுத்துவதில்லை என்று அறிவித்தது.

நாகலாந்து மாநிலத்தில் நாகா இனத்தவர் அதிகம் வாழும் பகுதிகளு டன் பக்கத்து மாநிலங்களில் எல்லை களில் நாகர்கள் அதிகம் வாழும் பிரதேசங்களை இணைத்து தனி மாநிலம் அமைக்கக் கோரி நாகா தீவிரவாதிகள் போராடி வருகின்றனர்.

கடந்த மாதம் 7ஆம் திகதி நாகா தீவிரவாதிகளுக்கும் மத்திய அரசுக் கும் யுத்தநிறுத்த உடன்பாடு ஏற் பட்டது.

மணிப்பூர், அஸாம் ஆகிய மாநிலங் களில் நாகா மக்கள் அதிகம் வாழும் பகுதிகளும் யுத்த நிறுத்தம் அமுல் படுத்தப்படும் பகுதிகளாக மத்திய அரசு அறிவித்திருந்தது.

இந்த அறிவிப்பு, தமது மாநில ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் ஏற்படுத் தும் என்றும் கூறி, அதற்கு எதிராக மணிப்பூர் மக்கள் போராட்டங்கள் நடத் தினார்கள்.

ஊரடங்கு உத்தரவு போடப்பட்ட போதும், அதனை லட்சியம் செய்யாது மக்கள் நடத்திய போராட்டங்களுக்கு பணிந்து மத்திய அரசு யுத்த நிறுத் தத்தை நாகலாந்துடன் நிறுத்திக் கொள்வதாக அறிவித்துள்ளது. (ஒ-4)

# புலிகள் அமைப்பு மீதான தடையை நீக்கும் கேள்விக்கே இடமில்லை
## கதிர்காமர் கூறுகின்றார்

கொழும்பு,ஜூலை31

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடை நீக்கப் படுமா என்ற கேள்விக்கே இட மில்லை என வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அரசு சார்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டி யில் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் கட்டுநாயக்கா விமா னத் தளத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் போது பொது மக்களும், வர்த்தக மையங்களும் முக்கிய இலக் குகளாக அமைந்ததாகவும் -

இத்தகைய கொடூரத் தாக்குதல் காரணமாக இலங்கையிலோ அல் லது வெளிநாடுகளிலோ, விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கும் விவகாரம் முற்றாக நிராகரிக்கப்பட்டு விட்டதாகவும் -

அமைச்சர் கதிர்காமர் தெரிவித்த தாக அப்பத்திரிகை குறிப்பிட்டது. அமைச்சர் கதிர்காமர் மேலும் கூறி யதாவது:-

அமெரிக்கா உட்பட விடுதலைப் புலிகளைத் தடைசெய்துள்ள சில நாடு கள் தமது முடிவின் மீது எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வருடாந்த மீளாய்வை மேற்கொள்ள உள்ளன.

பிரிட்டன் கடந்த பெப்ரவரி மாதம வெளியிட்ட தடை செய்யப்பட்ட அமைப புக்களின் பட்டியல் மீதான மேன் முறையீடுகளை பரிசீலித்து வருகின் றது. விடுதலைப் புலிகள் அமைப்பு தனது மேன்முறையீட்டை பிரிட்டிஷ் அரசிடம் இனித்தான் சமர்ப்பிக்கவுள் ளதாகவும் தெரியவருகிறது.

அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ரஷ்யா உட்பட பல நாடுகள் கட்டு நாயக்கா விமானத் தளத் தாக்கு தலுக்குத் தமது கடுமையான கண் டனங்களைத் தெரிவித்திருப்பது விடுத லைப் புலிகளின் தடை குறித்த அந்த நாடுகளின் நிலைப்பாட்டை தெளிவாக்குகின்றது - இவ்வாறு அமைச்சர் கதிர்காமர் தெரிவித்துள் ளார்.

கடந்த வாரம் கட்டுநாயக்கா விமா னத்தளத் தாக்குதல் சம்பவத்தில் பொதுமக்கள் எவருக்கும் படுகாயங் களோ, உயிரிழப்போ அல்லது சர்வ தேச விமான நிலையப் பகுதியில் பாரிய சேதங்களோ ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-ஒ)

# என்.கே.கணேசனின் மறைவு கலைத்துறைக்குப் பேரிழப்பு
## நல்லை முதல்வர் அனுதாபம்

யாழ்ப்பாணம்,ஜூலை31

காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆஸ்தான நாதஸ்வர வித்துவான் என். கே.கணேசனின் மறைவு கலைத் துறைக்கு ஏற்பட்ட பாரிய இழப்பாகும் என்று நல்லை ஆதன முதல்வர் சோம சுந்தர ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவா மிகள் தெரிவித்துள்ளார்.

கணேசனின் மறைவை ஒட்டி சுவாமி கள் விடுத்துள்ள அனுதாபச் செய்தி யிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள் ளது.

ஈழத்தில் புகழ்பூத்த கலைஞர்கள் வரிசையில் இடம்பெற்று தனது தெய வீக இசைமூலம் இறைவனுக்கு பணி யாற்றியவர் அமரர் கணேசன். ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானத்தில் நீண்ட காலமாக ஆஸ்தான வித்துவானாக இருந்து தெய்வீக பணியாற்றினார்.

அன்னாரின் மறைவு ஈழத்து தமிழ் மக்களுக்கும் கலைத்துறைக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும் - என்று சுவாமி கள் மேலும் தெரிவித்துள்ளார். (உ-3)

### அனுமதி அட்டைகள் ஆசீர்வாதத்துடன் வழங்கும் நிகழ்வு

வலி.வடக்கு,ஜூலை31

மானிப்பாய் மெமோறியல் ஆங் கில பாடசாலையில் இருந்து ஜி.சீ. ஈ.(உயர்தர) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு 'மாதா, பிதா, குரு, தெய்வ' ஆசீர்வாதத்துடன் அனுமதி அட் டைகள் வழங்கும் நிகழ்வு நாளை பிற் பகல் 3.30 மணிக்கு பாடசாலை அழகரத்தினம் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (உ-3-86)

## பாதுகாப்பு ஏற்பாடு தொடர்பாக
# உலக விமானசேவை அமைப்பிடம் உதவி கோருகிறது இலங்கைஅரசு

கொழும்பு,ஜூலை31

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை, பாதுகாப்பு உட்பட சகல விதங்களிலும் சர்வதேச தரத் துக்கு உயர்த்துவதற்கு உதவும்படி சர்வதேச சிவில் விமானப் போக்கு வரத்து அமைப்பிடம் இலங்கை கோரியுள்ளது.

கனடாவுக்கான இலங்கைத் தூதர் ஊடாக வெளியுறவு அமைச் சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்த வேண்டு கோளை விடுத்தார்.

நேற்று திங்கட்கிழமை இலங் கைத்தூதர், சர்வதேச சிவில் விமா னப் போக்குவரத்து அமைப்பின் அதிகாரிகளைச் சந்தித்து இலங்கை அரசின் வேண்டுகோளைத் தெரிவித் ததாகவும் -

இதையடுத்து விமானசேவைகள் தொடர்பான நிபுணர்கள் விரைவில் கொழும்பு வரவுள்ளதாகவும் -

அமைச்சர் கதிர்காமர் தெரிவித் துள்ளார்.

சர்வதேச சிவில் விமானப்போக்கு வரத்து அமைப்பு (ஐ.சி.ஓ.ஏ) உலக ளாவிய ரீதியில், விமானசேவைக ளுக்குகான பாதுகாப்பு விதிமுறை களை வரைந்து, செயற்படுத்தும் ஐ.நா.அமைப்பாகும். (உ-ஒ)

## மரண அறிவித்தல்

### முருகேசு இராசு

கலட்டியைப் பிறப்பிடமாகவும் கற்குளம் லேன் கொட்டடியை வசிப் பிடமாகவும் கொண்ட முருகேசு இராசு நேற்று (30.07.2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கமலாவின் அன்புக் கணவரும் கமலதாசன், கலாவதி, பிறேமதாஸ், ரகுதாஸ் (சுரேஸ்), லங்கேஸ்வரி, ராஜேஸ்வரி, அரவிந்தன், அருள்ளாள் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2001) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சகோதரர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.செல்வராசா (வேலணை) (மருமகன்), மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*8/15, கற்குளம் லேன்,*
*கொட்டடி,*
*யாழ்ப்பாணம்.*

(90666)

# பூலான்தேவி படுகொலைப் பின்னணி பழிக்குப்பழியா? அரசியல் சதியா?

உலகில் ஒரு பெண் அனுபவிக்கக் கூடிய அனைத்துத் துன்பங்கள், அவமானங்களையும் தனது 37 வயதுக்குள் அனுபவித்து - இறுதியில் கடந்த 25 ஆம் திகதி தனது வீட்டு வாசலிலேயே சுட்டுக் கொல்லப்பட்ட பூலான்தேவியின் மரணத்தின் காரணம், அவரது வாழ்க்கையைப் போலவே மர்மம் நிரம்பியதாக உள்ளது.

இந்தியாவின் சம்பல் பள்ளத்தாக்கில் கொள்ளை ராணியாக உலாவந்தபோது நிகழ்ந்தவற்றுக்காக அவர் பழிவாங்கப்பட்டாரா? அல்லது -

தாழ்த்தப்பட்ட மக்களின் குறிப்பாக ஏழைப் பெண்களின் இலட்சிய நாயகியாக உருமாறி வந்த அரசியல்வாதி என்பதனால் பொறாமை கொண்டு நிகழ்ந்த சதிச் செயலுக்குப் பலியானாரா?

இந்தியப் பொலீஸார் விடை காணத் துடிக்கும் கேள்விகள் இவை.

நாம் இதற்கு விடை காணவேண்டுமானால் பல வருடங்கள் பின்னோக்கிச் செல்ல வேண்டியுள்ளது.

## படகோட்டியின் புதல்வி

உத்தரப் பிரதேசத்தில், படகோட்டி இனமான மலாய் சமூகத்தைச் சேர்ந்தவர் பூலான்தேவி. ஏழைப் படகோட்டிக் குடும்பத்தில் பிறந்தபோதும், இரு சகோதரிகளுடன் சிறு வயதுக் குறும்புகளுடன் சந்தோஷமாகத்தான் காலங் கழித்தார் பூலான்; தனது பதினொரு வயதுவரை.

அப்போதுதான் அவரின் வாழ்வை அடியோடு புரட்டிப்போட்ட அந்தச் சம்பவம் நடந்தது. பெஹ்மாயில் வசிக்கும் ஒருவரிடமிருந்து சிறுதொகையை கடனாக வாங்கியிருந்தார் பூலானின் அப்பா. வட்டிக்கு மேல் வட்டி குட்டி போட்டதில் சிறு தொகை மலையளவு வளர்ந்திருந்தது.

ஒரு நாள் கடன் கொடுத்தவன் நேரில் வந்து வாங்கிய கடனைத் திருப்பித் தரும்படி ஒற்றைக் காலில் நின்றான். விழிபிதுங்கினார் பூலானின் தந்தை.

"வாங்கிய கடனைக் கொடு. இல்லாவிட்டால் நீ வளர்க்கும் பசுமாட்டைக் கொடு" -

"ஐயா பால் விற்றுவரும் பணத்தில்தான் எனது குடும்பம் ஒரு வேளை கஞ்சியாவது குடிக்கிறது" - "சரி, அப்படியென்றால் இந்தச்


கொள்ளை ராணியாகப் பூலான்தேவி

சைக்கிளைக் கொடு" - "ஐயா, பால் விற்க எடுத்துச் செல்ல அங்கு, இங்கு போய்வர இந்தச் சைக்கிளை விட்டால் வேறு கதி இல்லை - "அப்படி என்றால், வேறு எதையாவது கொடுத்துக் கடனை அடை"

மனைவியுடன் கலந்தாலோசித்துவிட்டு பூலானின் தந்தை ஒரு முடிவுக்கு வந்தார் - "ஐயா எனது மகளை திருமணம் முடித்துத் தருகிறேன் அவளுக்கு 11 வயதுதான் ஆகிறது"

விளையாட்டு பருவம் அகலாத பூலான்தேவிக்கு இப்படித்தான் கல்யாணம் ஆனது.

பசுமாட்டையும் சைக்கிளையும் இழக்க விரும்பாத பெற்றோர், மிருகத்தையும், சடப்பொருளையும் விட கேவலமாக 11 வயதுச் சிறுமியை மதித்தது கொடுமையென்றால் -

கடன் கொடுத்த காரணத்தால், 11 வயதுச் சிறுமியை விவாகம் செய்யத் துணிந்தவனின் வயது 31 ஆக இருந்தது அதைவிடக் கொடுமை.

திருமணத்தின் பின்னர் அச்சம் அகலாத விழியுடன் 31 வயது கணவருடன் 11 வயதுச் சிறுமி பூலான், கணவனின் ஊரில் கால் வைத்தாள்.

வாழ்வின் முதல் கசப்பை தனது வாழ்வில் அங்குதான் அனுபவித்தாள் பூலான்.

ஆம், 31 வயது மனித மிருகம் 11 வயது மட்டுமே நிரம்பிய சின்னஞ்சிறு மொட்டை - கணவன் என்ற மமதையுடன் - கசக்கி முகர்ந்தது.

நினைக்கவே நெஞ்சைப்பிளக்கும் இந்தக் கொடூரத்தைத் தாங்கிக் கொண்டு, ஆறுதல் சொல்லவும் ஆள இன்றி, கணவரின் வீட்டார் குவித்து வைத்த வேலைகளை இயந்திரம் போல் செய்தாள் பூலான்.

எத்தனை நாள்கள்தான் சித்திரவதைகளைத் தாங்குவது. சொல்லாமல் கொள்ளாமல் எப்படியோ மீண்டும் தனது வீட்டிற்கே வந்து சேர்ந்தாள் பூலான்.

காலம் ஓடியது. பூலானின் சகோதரிகள் திருமணம் முடித்துச் சென்றனர். பூலான் கிராமத்திலேயே வளர்ந்தாள்.

விதி மீண்டும் விளையாடியது. அந்த ஊரிலிருந்த உயர் இன இளைஞர்கள் வடிவில்.

விறகு பொறுக்கச் சென்ற பூலானை அவர்கள் ஒருநாள் பலாத்காரம் புரிந்தனர். பெண்ணாக இருந்தாலும் வாழ்க்கையின் சோகம் இரும்பாக மாறிவிட்ட பூலான் அவர்களை அடித்து விரட்டிவிட்டு ஊர் பஞ்சாயத்தில் முறையிட்டாள். ஆனால் உயர் இனத்தவர்கள் அடங்கிய பஞ்சாயத்து இளைஞர்களை பூலானே தவறான உறவுக்கு அழைத்ததாகக் கூறி அவமானப்படுத்தியது.

அத்துடன் பொலீஸிடம் பூலானை ஒப்படைத்தது. சட்டத்தைக் காக்க வேண்டிய பொலீஸார், அப்பாவியான பூலானை - உயர் இனத்தவர் வீசும் எலும்புத்துண்டுகளுக்கு வாலாட்டும் நாய்களாக - பொலீஸ் நிலையத்தில் வைத்து கும்பலாக பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கினர்.

பின்னர் எச்சரித்து அனுப்பினர்.

அதனால் அங்கு வாழ முடியாத பூலான் சகோதரி வாழ்க்கைப்பட்ட ஊருக்கு சென்றாள். சகோதரியின் கணவர் சம்பல் பள்ளத்தாக்கு கொள்ளையர்களுக்கு பொருள்களை விற்றுவந்தார். அங்குதான் பூலான் கொள்ளைக்காரன் விக்ரம் சிங்கைக் கண்டாள்.

தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவன் விக்ரம். கொள்ளையர்களிலும உயர் இனத்தைச் சேர்ந்தவர்களே தலைவர்களாக இருந்தனர். தாழ்த்தப்பட்டவர்கள் அவர்களிடம் அடிமைகளாக இருந்தனர்.

அப்படி அடிமையாக இருந்தான் விக்ரம். அவன் பூலான் மேல் கருணைகாட்டினான்.

இந்த நிலையில், தனது கணவருக்கும் பூலானுக்கும் தொடர்பு இருப்பதாகக் கருதிய சகோதரி, பூலானை மீண்டும் சொந்த ஊருக்கே அனுப்பினாள். பூலான் சொந்த ஊருக்கு திரும்ப முன்னரே அங்கு சென்றுவிட்டது பூலானி தலைவதி. ஏற்கனவே பூலானிடம் அடிவாங்கிய வஞ்சத்தினால், உயர் இன கொள்ளையர் தலைவன் ஒருவனிடம் பூலானைப் பிடித்து ஒப்படைத்தனர் 'தாகுர்' என்ற உயர் இன இளைஞர்கள்.

பூலானைப் பிடித்துச் சென்ற 'தாகுர்' இனக் கொள்ளையன் நேரம் காலம் இல்லாமல், உடற்பசி எடுத்த போதெல்லாம் பூப் போன்ற பூலானைக் கொடூரமாக முகர்ந்தான். அந்தக் கொள்ளைக் கும்பலில் பூலானை முன்னரே சந்தித்த விக்ரமும் இருந்தான்.

நடக்கும் கொடுமை கண்டு மனம பொறுக்க முடியாமல், கொள்ளையர் தலைவனை சுட்டுக் கொன்று விட்டு, பூலானை மீட்டான் விக்ரம்.

அதன்பிறகு தாழ்த்தப்பட்ட இனத்தவர்கள் அடங்கிய கொள்ளைக் குழு ஒன்றை அமைத்த விக்ரம், அதில் பூலானையும் சேர்த்துக் கொண்டான்.

> பெஹ்மாயில் தாகுர் இன ஆண்களைக் கொன்ற வழக்கு இன்னமும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இறந்தவர்களின் மனைவிமார் சார்பில் இந்த வழக்குத் தொடுக்கப்பட்டது.
>
> இந்த வழக்கில், தாகுர் இனத்தவரை தான் கொல்லவில்லை என்றே இறுதிவரை பூலான்தேவி கூறிவந்தார். அவருடன் சென்ற மற்றக் கொள்ளையர்கள் சுட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.
>
> 'ஆண்கள் தவறு செய்திருக்கலாம் ஆனால் அவர்களது மனைவிமார்கள் தவறு செய்யாமலேயே கணவன்மாரை இழந்து தவிக்கிறார்களே' என்று ஒருமுறை செய்தியாளர் ஒருவர் பூலான் தேவியிடம் கேட்டார்
>
> அதற்கு பூலான் தேவி கூறினார் -
>
> 'எனக்கு அந்தக் கொடூரம் நிகழ்ந்தபோது, இவர்கள் அதைத் தடுக்காமல் வேடிக்கை பார்த்தார்கள். தவறிழைப்பது மட்டுமல்ல, தவறினைக் கண்டு கொள்ளாமல் - எதிர்க்காமல் - வேடிக்கை பார்ப்பதும் குற்றமே' என்று.

ஆனால் விதி மீண்டும் விளையாடியது. 'தாகுர்' இனக் கொள்ளையர்கள் விக்ரமை சுட்டுக் கொன்றுவிட்டு பூலானை பிடித்து தாகுர்களின் ஊரான பெஹ்மாய்க்கு இழுத்துச் சென்றனர்.

அங்குதான் அந்தக் கொடூரம் நிகழ்ந்தது. மாட்டுக்கொட்டகை ஒன்றில் அடைக்கப்பட்ட பூலான் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டாள். கொள்ளையார்களால் மட்டுமல்ல - பெஹ்மாயில் வசித்த 'தாகுர்' இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் முதல் வயோதிபர்கள் வரையிலான ஆண்கள் தொடர்ந்து மாட்டுக்கொட்டகையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த பூலானிடம் தம் மிருக இச்சையை தீர்த்துக் கொண்டனர்.

சில நாள்களின் பின்னர் வெளியில் இழுத்துப் போடப்பட்டாள் பூலான். தாகத்தினால் தவித்த பூலானை ஊரில் நடுவிலிருந்த பொதுக்கிணற்றில் நீர்

> **சோகங்களும் அவமானங்களும் சுட்டெரிக்க, வீறு கொண்டெழுந்த பெண்ணின் மரணத்தைச் சூழ்ந்துள்ள மர்மம்**

அள்ளிக் குடிக்க தாகுர்கள் அனுமதித்தனர்.

ஆனால் எப்படி? முழு நிர்வாணமாக. ஊரில் அத்தனை பேரும் பார்த்திருக்க இளம் பெண் பூலான் நிர்வாணமாக வேறு வழியின்றி கிணற்றில் நீர் அள்ளிக் குடித்தாள். அவள் அப்போது குடித்தது நீரை மட்டுமல்ல தாகுர்கள் மேல் ஏற்பட்ட கோபத்தையும் சேர்த்துத்தான்.

இத்துடன் தொலைந்தாள் பூலான். இனி அஞ்சி நடுங்கி எங்காவது ஒரு மூலையில் ஒடுங்கிக் கிடப்பாள் என்று நம்பிய உயர் சமூக தாகுர்கள் பூலானை விடுவித்து விரட்டி விட்டனர்.

## பூ ஒன்று புயலானது

ஆனால் ஒரு பெண் புலியை - அதுவும் வஞ்சம், கோபம், வெறி நிறைந்த பூலான்தேவியை உருவாக்கிவிட்டது தெரியாமல் அவர்கள் தம் வஞ்சம் தீர்த்த மகிழ்ச்சியை கொண்டாடினர்.

பூலான் நேராக மற்றொரு கொள்ளைக் கும்பலில் சேர்ந்தாள். அங்கு இருந்தவர்களையும் சேர்த்து தானே ஒரு கொள்ளைக் கும்பலை அமைத்தாள்.

பூவாக இருக்கும் ஒரு பெண்ணை புயலாக மாற்றியதன் பலனை அப்போதுதான் தாகுர்கள் தெரிந்து கொண்டார்கள். கொடுத்த கடனுக்காக 11 வயதில் தன் வாழ்க்கையைச் சீரழித்தவனை, அவனது ஊரில் வைத்தே அடித்துக் கொன்றாள் பூலான்.

பின்னர் தாகுர்களின் ஊர்களாகப் பார்த்துப் பார்த்துக் கொள்ளையடித்தாள். 'தாகுர்' இனத்தவர் பூலானின் பெயரைக் கேட்டாலே நடுங்க, தாழ்த்தப்பட்ட மக்களோ, தம்மைக் காக்க வந்த சக்தியின் அவதாரமாகவே பூலானைக் கருதினர்.

ஏழ்மையான, தாழ்த்தப்பட்ட குடும்பத்தில் பிறந்த பூலான் - கொள்ளை ராணி பூலான் தேவியாக விஸ்வரூபம் எடுத்தார்.

ஆனாலும் பெஹ்மாயில் தனக்கு நிகழ்ந்த அவமானம் பூலான்தேவியின் அடிமனதில் தீயாக எரிந்து கொண்டே இருந்தது.

1981 ஆம் ஆண்டு பெஹ்மாயிக்குள் புயலாக நுழைந்தார் பூலான் தேவி தனது படையுடன். வீட்டுக்குள ஒளிந்த 'தாகுர்' இன ஆண்கள் வெளியே இழுத்துவரப்பட்டு சுட்டுத் தள்ளப்பட்டனர்.

பூலான்தேவி பெஹ்மாயை விட்டு அகன்ற போது வீதிகளில் 22 'தாகுர்' இன ஆண்கள் பிணமாகக் கிடந்தனர்.

வெகுநாள் வஞ்சம் தீர்த்த பிறகு, கொள்ளையர் வாழ்வில் அதிருப்தியடைந்த பூலான் தேவி 1983 ஆம் ஆண்டு மத்திய பிரதேச முதல்வர் முன்னிலையில் பொலீஸாரிடம் சரணடைந்தார்.

பெஹ்மாய் கொலைகள் உட்பட 56 வழக்குகளை பூலான் தேவி எதிர் கொண்டார்.

வழக்குகளின் முடிவில் 11 ஆண்டுகளை சிறையில் கழித்துவிட்டு 94 இல் பூலான்தேவி பொது மன்னிப்புப் பெற்று விடுதலையானார். பின்னர் உமைத் சிங் என்பவரைத் திருமணமும் செய்துகொண்டார்.

அத்துடன், உத்தர பிரதேசத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் கட்சி என்று கருதப்படும் சமாஜ் வாதுக் கட்சியில் சேர்ந்து 96 இல் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டார். ஜனநாயக விசித்திரம் நிகழ்ந்தது.

ஆம் - சம்பல் பள்ளத்தாக்குக் கொள்ளை ராணி, இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் இருக்கையில் கம்பீரமாக அமர்ந்தார்.

அடுத்து 98 தேர்தலில் தோற்றபோதும், 99ஆம் ஆண்டு தேர்தலில் வென்று, மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினரானார்.

இந்த நிலையில்தான், கடந்த 25 ஆம் திகதி, நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் கலந்துகொண்டுவிட்டு, மதிய உணவுக்காக வீடு திரும்பிய பூலான்தேவி, தனது வீட்டு வாசலில் வைத்து, மூன்று பேரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தப் படுகொலை தொடர்பாக பங்கஜ் என்ற தேஷிங் ராணா என்பவனை டேராடூனில் வைத்து பொலீஸார் கடந்த 28ஆம் திகதி கைது செய்தனர். தேஷிங் ராணா ஒரு பட்டதாரி இளைஞன்.

கைது செய்யப்பட்டவுடன் பொலீஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் -

1981இல் பெஹ்மாயில் 22 'தாகுர்' இன ஆண்களை பூலான்தேவி கொன்றதுக்குப் பழி வாங்கவே, இருபது ஆண்டுகள் காத்திருந்து, அவரைக் கொலை செய்ததாகவும் -

இதற்கு ரவீந்தர், ராஜ் பித்சிங் ஆகியோர் தனக்கு உதவியதாகவும் தேஷிங்ராணா தெரிவித்தான்.

ஆனால் தமது விசாரணைகளில் கிடைத்த மற்றைய தகவல்களால் பொலீஸார் தேஷிங்ராணாவின் வாக்குமூலத்தை நம்பவில்லை.

பூலான்தேவியால் கொல்லப்பட்டவர்கள் தாகுர் இனத்தவர், ராணா, இனத்தைச் சேர்ந்தவனென்று கூறப்படும் தேஷிங் ராணா அதற்கு எதற்காகப் பழி வாங்கவேண்டும் என்று சந்தேகம் எழுந்துள்ளது.

இதைத் தவிர, பூலான்தேவி கொல்லப்பட்ட அன்று, காலையில் அவர், தேஷிங்ராணாவின் காரில்தான் நாடாளுமன்றம் சென்றுள்ளார் என்பது தெரிய வந்தது.

பூலான்தேவியின் சொந்த ஊரான மிர்சாபூரைச் சேர்ந்தவரும், சமஜ் வாஜக் கட்சியின் தீவிர தொண்டருமான உமா கஷ்யப் என்ற பெண்ணே தேஷிங் ராணாவை இந்த ஆண்டின் ஆரம்பத்தில் பூலான்தேவிக்கு அறிமுகம் செய்து வைத்தவர்.


பூலான் சரணடைந்தபோது

அத்துடன், உமாகஷ்யப், அவரது கணவர் விஜயகுமார் ஆகியோர், கொலைச் சம்பவத்துக்கு முதல் நாள் தேஷிங்ராணாவுடன் ஒரே காரில் மிர்சாபூரிலிருந்து ஒன்றாக புதுடில்லி வந்துள்ளனர்.

இதனையடுத்து உமா கஷ்யம் தம்பதியைப் பொலீஸ் விசாரித்து வருகிறது.

ஆனால் இவர்களுக்குக் கொலை பற்றி எதுவும் தெரியாதென்றே தேஷிங்ராணா வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளான். இதனைப் பொலீஸ் நம்பத் தயாராயில்லை.

அவர்கள் வேறு ஒரு கோணத்திலும் விசாரணையை நடத்துகின்றனர்.

## தாழ்த்தப்பட்டோரின் லட்சிய நாயகி

தாழ்த்தப்பட்ட மக்களிடம் குறிப்பாக தாழ்த்தப்பட்ட இனப் பெண்களிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார் பூலான்தேவி. மற்ற அரசியல்வாதிகள் போன்று, அலங்காரப் பேச்சு, ஆடம்பரம் எதுவுமின்றி, நடை, உடை, பாவனைகளில் தங்களில் ஒருத்தியாகத் தோன்றும் பூலான்தேவியை அவர்கள் நேசித்தார்கள்.

கொள்ளைக்காரி என்பதை மறந்து, உயர் இனத்தவர்களின் கொடுமைகளுக்குப் பதிலடி கொடுத்து, அவர்களைக் கலங்கடித்தவர் என்ற வகையில் பூலான்தேவியைத் தாழ்த்தப்பட்டவர்கள் தமது இலட்சிய நாயகியாகவே எண்ணுகின்றனர்.

இதனால், அரசியலில் மக்கள் ஆதரவை அமோகமாகப் பூலான்தேவி பெற்றதால், அவர் மீது பொறாமை கொண்ட சிலர், அவரது வளர்ச்சி தமது முன்னேற்றத்துக்கு இடையூறாக இருக்கக்கூடும் என்ற காரணத்தால் அவரைக் கொன்றுவிட்டு, தாகுர் இனப் படுகொலைகளைக் காட்டி பொலீஸாரைத் திசை திருப்பும் முயற்சி நடப்பதாகவும் பொலீஸ் கருதுகிறது.

பொலீஸ் விசாரணைகளில் இந்தக் கொலை தொடர்பான உண்மைகள் வெளிவரலாம் அல்லது மூடி மறைக்கப்படலாம்.

ஆனால் -

தாழ்த்தப்பட்ட, ஏழ்மையான குடும்பத்தில் பெண்ணாகப் பிறந்துவிட்ட ஒரே ஒரு குற்றத்துக்காக, வார்த்தைகளில் வடிக்க முடியாத சோகங்களையும், அவமானங்களையும் பட்டு, அவற்றால் தளர்ந்துவிடாது, உரம் பெற்று, தன்னை நசுக்கியவர்களையே கலங்கடித்து, இந்திய நாடாளுமன்றத்திலும் கால் பதித்துவிட்ட பூலான் தேவியைப் பற்றிய கதைகள் மட்டும் காலங்காலமாக சம்பல் பள்ளத்தாக்கில் எதிரொலித்துக் கொண்டே இருக்கும்.

# ஜனாதிபதியுடன் பேச்சு நடத்த முஸ்லிம் காங்கிரஸ் நிபந்தனை

கொழும்பு, ஜூலை 31
ஜனாதிபதியுடன் பேச்சு நடத்துவதற்கு இரு முன் நிபந்தனைகளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விதித்துள்ளது என்று அதன் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்கா விமானத் தளம் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதல் மற்றும் இன்றைய அரசியல் நிலை குறித்து எதிர்க் கட்சிகளுடன் பேச ஜனாதிபதி அழைப்புக்களை அனுப்பிய போதும்—

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு இதுவரை அழைப்பு ஏதும் அனுப்பவில்லை.

பேச வருமாறு ஜனாதிபதி அழைத்தால், எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயற்குழு நேற்றுமுன் தினம் கூடி ஆராய்ந்தது.

நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டவேண்டும் என்றும்—

சர்வஜன வாக்கெடுப்பைக் கைவிட வேண்டும் என்றும்—

இரு நிபந்தனைகளை முன்வைத்தே ஜனாதிபதியுடன் பேசுவது என்று தமது கட்சியின் செயற்குழு முடிவுசெய்துள்ளதாக ஹக்கீம் தெரிவித்தார்.

ஆட்சி அமைப்பதில் முக்கிய பங்கு வகித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை பேச்சுக்கு அழைக்காமல் புறக்கணித்த ஜனாதிபதியின் செயல் எம்மை அவமதிப்பதாக உள்ளது என்று ஹக்கீம் மேலும் கூறியுள்ளார்.
(ஐ-3)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, ஜூலை 31
யாழ். மாவட்ட தாச்சி சங்கம் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு மருதனார் மடம் வலி. தெற்கு பிரதேச சபை திறந்த வெளி அரங்கு மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டத்தில், மயிலிட்டி பாடும் மீன் விளையாட்டுக் கழகமும் இணுவில் அறிஞர் விளையாட்டுக்கழகமும் பங்கு பற்றுகின்றன. (ஐ-86)

★ ★ ★

நல்லூர் பிரதேச சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களிடையே பிரதேச சபையினால் நடத்தப்பட்டு வரும் கபடிச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதிஆலயத்துக்கு அருகில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பெண்கள் பிரிவில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியும் திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலைய 'ஏ' அணியும் பங்குபற்றுகின்றன.

ஆண்கள் பிரிவுக்கான அரையிறுதி ஆட்டமும் இன்று இடம்பெறவிருக்கின்றது.
(ஐ-86)

## செயலகத்தில் அறிவுறுத்தல் வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 31
சர்வஜன வாக்கெடுப்பை அஞ்சல் வாக்காளர்கள் — அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தர்களுக்கான அறிவுறுத்தல் வகுப்பு யாழ். செயலகத்தில் எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தர்கள் அனைவரையும் இவ் வகுப்பில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் அறிவித்துள்ளார்.

இந்த வகுப்பின் இறுதியில் சில முக்கியமான ஆவணங்களும் கையளிக்கப்படவுள்ளதாகவும்—

சமூகமளிக்கும் உத்தியோகத்தர்களுக்கு வரவுச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.
(க-6-4)

# உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் எழுதுநர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 31
யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு எழுதுவினைஞர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சை மிக விரைவில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் யாழ். செயலகம் ஊடாக உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்குக் கிடைத்துள்ளது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் யாழ்ப்பாணத்திலேயே நடைபெறவுள்ளன.

நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

★ பத்மாம்பிகை செல்லத்துரை (சுழிபுரம் மேற்கு).

★ கார்த்திகேசு துவாரகன் (செபமாலைமாதா கோயிலடி, அம்பலவாணர் வீதி, உடுவில்).

★ நடேசபிள்ளை கஜேந்திரகுமார் (விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு).

★ ஏ.தில்லைநாதன் இல. 75, கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு.

★ அஞ்சலா சுப்பிரமணியம் (வவுனியா).

இவர்கள் 6 பேரும் கொழும்பில் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்குச் செல்ல முடியாத காரணத்தால் யாழ் செயலகத்தில் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ள திகதி பின்னர் அறிவிக்கப்படும் என யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-6-4)

## தேவரையாளிஇந்து மாணவனை காணோம்

யாழ்ப்பாணம், ஜூலை 31
தேவரையாளி இந்துக் கல்லூரியின் மாணவன் ஒருவரைக் காணவில்லை என்று அவரின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

துன்னாலை கிழக்கைச் சேர்ந்த தயாளன் துஷ்யந்தன் (வயது 17) என்பவரே காணாமற்போனவராவார்.

கடந்த 22 ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை என்று அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ஐ-10)

## தலைமைத்துவ பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 31
நெடுந்தீவில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் நிர்வாக உறுப்பினர்களுக்கு 5 நாள் தலைமைத்துவப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவினரின் ஆதரவுடனும் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி உதவியுடனும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மேற்படி தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறையை ஏற்பாடு செய்துள்ளனர்.

ஓகஸ்ட் மாத இறுதி வாரத்தில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படவுள்ளன.
(ஐ-6-4)

## சமய சந்நிதிகளில்

இணுவில் சிவன் ஆலயத்தில் எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வரலட்சுமி பூசை நடைபெறும். கிரியைகளை தாணு. வாசுதேவக் குருக்கள் நிகழ்த்துவார். (க-7)

★ ★ ★

தாவடி ஸ்ரீஅம்பலவாண கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி வியாழக்கிழமை வேட்டைத் திருவிழாவும், 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு தேர்த்திருவிழாவும் நடைபெறும். (க-7)

★ ★ ★

ஏழாலை சூராவத்தை ஸ்ரீமுத்துமாரி அம்பாள்ஆலய வருடாந்த மஹோற்சவத்தில் நாளை புதன்கிழமை சப்பறத் திருவிழா நடைபெறவுள்ளது.

அன்று மாலை 4.30 மணியளவில் ''வாரி வழங்கும் மாரி அம்பாள்'' என்னும் பொருளில் நாச்சிமார் கோயிலடி சைவப் புலவர் கவிமணி இராசையா ஸ்ரீதரன் தெய்வீகச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். அதைத் தொடர்ந்து 6.00 மணிக்கு வசந்த மண்டபப்பூசை நடைபெற்று அழகிய சப்பறத்தில் அம்பாள் திருவீதியுலா வருங் காட்சியும் இடம்பெறும்.

எதிர்வரும் வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (க)

★ ★ ★

சங்கானை செங்கறபடை மகாதேவப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை தேர்த்திருவிழா இடம்பெறும். மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழா நடைபெறும்.

# படித்தால் மட்டும் போதாது பண்பும் நேர்மையும் வேண்டும்

## பாடசாலை நிகழ்வில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 31
எமது பிள்ளைகள் படித்தால் மட்டும் போதும் என்ற மனோபாவம் பெற்றோர் மனதில் இருந்து மாறவேண்டும். படிப்போடு பல்துறைகளிலும் பிள்ளைகள் பயிற்சி பெற்றவர்களாகத் திகழக்கூடிய வாய்ப்பையும் வளங்களையும் வழங்க வேண்டும். இவற்றிற்கு மேலாக தெய்வீக சிந்தையுள்ளவராக நேர்மையானவராக வாழாது போனால் அந்தப் படிப்பால் அல்லது எமக்குக் கிடைக்கும் பதவிகளால் என்ன பயன் உண்டு.

ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் புதிய மேல்மாடிக் கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய வடக்கு-கிழக்கு மாகாண சபைத் திறைசேரிப்பணிப்பாளர் சிவசிதம்பரம் கிருஷ்ணானந்தன் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேற்படி திறப்பு விழா ஆரம்பமாவதற்கு முன் ஏழாலை பாடசாலைக் கருணாகரப்பிள்ளையாருக்கு விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றன. பிரதம விருந்தினர்கள் அங்கிருந்து விழா மண்டபத்திற்கு மேள வாத்திய சகிதம் அழைத்து வரப்பட்டனர். அதனைத் தொடர்ந்து புதிய மேல்மாடிக் கட்டடத்தை பணிப்பாளர் சி. கிருஷ்ணானந்தன் திறந்து வைத்தார். பாடசாலை அதிபர் சிவநடராசா தலைமையில் தொடர்ந்து விழா நடைபெற்றது.

கிருஷ்ணானந்தன் தனது உரையில் மேலும் கூறியதாவது:-

நான் எனது சேவைக்காலத்தில் பலகாலம் வெளிமாவட்டங்களில் கடமை புரிந்துள்ளேன். அப்போது உங்கள் ஊர் எது என்று கேட்பார்கள், நான் ஏழாலை என்று பெருமையோடு கூறுவேன். அப்போது உங்களுக்கு சைவப் பெரியார் ஞானப்பிரகாசம், ஆத்மஜோதி முத்தையா, பேராசிரியர் குணரத்தினம் போன்றவர்களைத்தெரியுமா என்று கேட்பார்கள். நான் பெருமையோடு ஆம் என்று பதில் கூறுவேன். அவர்கள் கண்ணியமானவர்கள், நேர்மையானவர்கள் என்று கூறி எமக்குத் தனித்துவமான கௌரவத்தை வழங்குவார்கள். இத்தகைய பெருமையை எமது பிள்ளைகள் பெற வேண்டும். படித்துப்பதவியை மட்டும் பெற்றுவிட்டால் போதாது. நேர்மையாளன் என்ற பெருமையை பெறக் கூடிய வகையில் வாழப்பழகிக் கொள்ள வேண்டும் — என்றார்.

இந்து சமயப் பேரவையின் கௌரவ செயலாளர் சி.சக்திகிரீவன் பேசுகையில் —

தன்னைத்தான் நேசிக்கத் தெரியாத காரணத்தினாலேயே மனிதன் தீவினைகளில் அழுந்துகிறான். இதனால் உலகமும் துன்பத்தில் அழுந்தி விடுகிறது. தன்னை நேசிப்பவன் நன்மையையே என்றும் செய்வான். இதனால் நன்மையையே அவன் அனுபவிப்பான். இன்றைய அவசரமான உலகில் இத்தகைய போக்கு குறைந்து கொண்டு வருகிறது. இதனால் பிரச்சினைகளும் அதிகமாகிறது. பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கு ஒருவன் சுயதர்மத்தைப் பேணுபவனாக வாழப்பழக வேண்டும். இதுவே எமக்குப் பெரும் நன்மையைத் தருகின்றது. நல்லொழுக்கத்தையும் எமக்குத் தந்துவிடுகிறது — என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ. விநாசித்தம்பி ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

'சுகிர்தமலர்' என்னும் பாடசாலைச் சஞ்சிகையும் வெளியிடப்பட்டது.
(ஐ)

# சமாதானத்துக்கான முயற்சியில் நோர்வே தொடர்ந்து ஈடுபடும்

## அந்நாட்டுத் தூதரகம் தெரிவிப்பு

இலங்கைப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணும் முயற்சியை விடாது தொடர நோர்வே உறுதி பூண்டுள்ளதாக கடந்த சனிக்கிழமை நோர்வேத் தூதரகம் தெரிவித்தது.

இலங்கை அரசு அல்லது விடுதலைப் புலிகள் அமைப்பு ஆகியவற்றில் ஏதாவது ஒன்று சமாதான முயற்சியிலிருந்து நம்மை விலகும்படி கோராதவரை, இருதரப்பினரையும் பேச்சு மேசைக்குக் கொண்டுவரும் நோர்வேயின் ஏற்பாட்டாளர் பணி தொடரும் என்றும் தூதரகம்மேலும் கூறியுள்ளது.

இலங்கை அரசிடமிருந்தோ, விடுதலைப் புலிகளிடமிருந்தோ ஏற்பாட்டாளர் பணியிலிருந்து விலகும்படி இதுவரை நோர்வே கேட்டுக் கொள்ளப்படவில்லை என்றும் —

ஆகவே, எத்தகைய சம்பவங்கள் நிகழ்ந்தாலும், தமது பணியை இப்போதும் தொடர்வதாகவும் — நோர்வேத் தூதரகம் தெரிவித்துள்ளது.

கட்டுநாயக்கா விமான நிலையத் தாக்குதல் சம்பவம் பற்றி நோர்வேத் தூதரக வட்டாரங்கள் கூறுகையில், அமைதி முயற்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, முன்னெப்போதும் இல்லாத வகையில் நன்கு திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்ட தாக்குதல் என்று தெரிவித்தன. (ஒ)

## வலி. மேற்கில் சத்துணவுத் திட்டம் இன்று ஆரம்பம்

வலி. மேற்கில் உள்ள பாடசாலைகளில் தரம் ஒன்று மாணவர்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டம் இன்று காலை ஆரம்பித்து வைக்கப்படும்.

வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் இத்திட்டத்தை ஆரம்பித்து வைப்பார்.

மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை, பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம், சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை, வட்டு இந்துக் கல்லூரி, வட்டு மத்திய கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம், அராலி இந்துக் கல்லூரி ஆகியவற்றில் இன்று காலை 8 மணி முதல் 11 மணி வரை இந்த நிகழ்வு இடம்பெறும்.
(ம)

## விதைநெல் விநியோகம்

யாழ். மாவட்டத்தில்உள்ள சகல கமநல கேந்திர நிலையங்களிலும் காலபோகச் செய்கைக்கான விதை நெல் விநியோகம் நடைபெற்று வருகிறது.

பதிவு செய்யப்பட்டதும், உறுதிப்படுத்தப்பட்டதும், தரமானதுமான இந்த விதை நெல் ஒரு புசல் 620 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாக கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவித்தார்.
(க-10)

உதயன்

## நல்வழி காட்டுவதாக!

மலையக மக்களின் நாடாளு மன்ற பிரதிநிதித்துவத்தைக் குறைக்கச் செய்யும் எந்த அரசமைப்புக்கும் ஆதரவாக வாக்களிக்கும்படி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மலைய மக்களைக் கேட்காது.

- இப்படி அடித்துக் கூறியிருக்கிறார் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான்.

❋ இப்போதைய அரசமைப்பு சிறுபான்மையினத்தவருக்கு உகந்தது.

❋ இந்த அரசமைப்பின் கீழ் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவிக்குத் தெரிவு செய்யப்படுவதற்கு எவரும் சிறுபான்மை இன மக்களிலும் தங்கியிருக்கவேண்டும்.

❋ சிறுபான்மையினரின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் இந்த அரசமைப்பில் உறுதிசெய்யப்பட்டிருக்கின்றது.

- இன்னோரன்ன காரணங்களை அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

இவை மலையக சமூகத்தின் கண்ணோட்டத்தில் பொருத்தமானவையாக இருக்கலாம். ஈழத்தமிழர்களின் நலனைப் பொறுத்தவரை பொருந்தாமல் போகலாம். அது வேறு விடயம்.

என்றாலும் -

மலையக மக்களின் நாடாளு மன்றப் பிரதிநிதித்துவத்தை குறைக்கும் அல்லது அது குறித்து சந்தேகத்தை ஏற்படுத்தும் எந்த அரசமைப்புக்கும் நாம் ஆதரவளிக்கமாட்டோம் என்று அவர் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறியிருப்பது நோக்கற்பாலது.

அதாவது புதிய அரசமைப்பு இது தான் என்று திட்டவட்டமாக உறுதிப்படுத்தப்பட்டு, அது தங்கள் சமூகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தாது என்று சந்தேகத்துக்கு அப்பால் - ஐயம் திரிபுற - உறுதிப்படுத்தப்பட்டால் மட்டுமே அதற்கு ஆதரவாக வாக்களிக்கும்படி தமது மக்களைக் கோருவது என்பதில் இ.தொ.கவும், ஆறுமுகம் தொண்டமானும் உறுதியாக இருக்கின்றார்கள். அவர்கள் எந்த மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றார்களோ அவர்களுக்கு நியாயமான - செயற்பாடு - போக்கு - இது.

ஈழத் தமிழர்களைப் பொறுத்த வரை 1978 ஆம் ஆண்டு இந்த அரசமைப்பு நடைமுறைப்படுத்தப் பட்டபோதே அதை எதிர்த்தவர்கள் நாங்கள்.

எனவே இப்போது இந்த அரசமைப்பு மாற்றப்படுவதை நாம் வரவேற்கலாம் - ஆனால் அதற்கு முன்னர் புதிய அரசமைப்பு என்ன, அதில் ஈழத்தமிழர்களின் அடிப்படை அபிலாஷைகளை நிறைவு செய்யும் ஏற்பாடுகள் உள்ளனவா என்பதெல்லாம் திட்டவட்டமாக உறுதிப்படுத்தப் பட்டு தெளிவுபடுத்தப்படவேண்டும்.

அதைவிடுத்து, சந்திரிகாவை - அவரது அரசை - காப்பாற்றுவதற்காக ஈழத்தமிழர்களை வெற்றுக் காசோலையில் கையொப்பமிடக் கோருவது போல சர்வஜனவாக் கெடுப்பில் ஜனாதிபதியின் கோரிக்கைக்கு ஆதரவாக வாக்களிக்கும்படி கோருவது - சந்திரிகாவுக்கு வாலாட்டும் செயலே அன்றி வேறில்லை.

சந்திரிகா தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் போட்டியிட்டு தனது எம்.பிக்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைத்திருக்கின்றது இ.தொ.கா.

அந்தக் கட்சியே அரசமைப்பு மாற்றம் என்ற முக்கிய பிரச்சினை வரும் போது தனது மக்கள் என்ற நோக்கத்தில் - தனித்துவமாக - உறுதியாக நிற்கின்றது.

தனியாகப் போட்டியிட்டு நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவத்தைப் பிடித்துக்கொண்டவர்களுக்கு -

'ஆட்சியில் இருப்போரோடு சேர்ந்து தனது சமூகத்திற்கு தேவையானவற்றை பெற்றுக் கொடுக்கும் சௌமியமூர்த்தி தொண்டமானின் பாணியே எமது பாணி' என்று அடிக்கடி கூறி, தமது ஆளும் கட்சி சார்புப் போக்கை நியாயப்படுத்துபவர்களுக்கு -

ஆறுமுகம் தொண்டமானின் இந்தப் பேட்டி நல்வழி காட்டுவதாக!

# தேசிய கல்வியியற் கல்லூரிக்கு புதிய மாணவர்கள் அனுமதி

## 10 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும்

யாழ்ப்பாணம்,ஜூலை31

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் மூன்றாண்டு கால சேவை முன் உயர் தொழில் பயிற்சியை மேற்கொள்ள புதியவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர்.

இதற்கான விண்ணப்பங்களை சம்பந்தப்பட்டவர்கள் அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளருக்கு அனுப்ப வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜி.சீ.ஈ. (சாதாரண), ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சைப் பெறுபேறுகளின் சுட்டிலக்கங்களை தெளிவாகவும், பிழையின்றியும் எழுதவேண்டும் என்று யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் கேட்டுள்ளார்.

கடந்த காலங்களில் சுட்டிலக்கங்களை ஒழுங்காக எழுதாததால் பலர் அனுமதியைக்கூட இழந்துள்ளனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(க-3)

## நாட்டு நடப்பு

### நல்லையில் - I

வடமென சங்கிலி ஒன்றை
வண்ணமாய்க் கழுத்தில் மாட்ட
அடிவயிறு மட்டும் சென்று
அங்கது தொட்டு நிற்க
'கட' பானை போல் வயிற்றினோடு
கடகடவென பிரதட்டை பண்ண
"அட! இவன் செல்வத்திற்கு
அதிபதி" என்றார் பக்தர்!

- விகடகவி -

# இடித்துரைப்பது யார்?

சமாதானத்துக்கான காலமும் சூழ்நிலையும் கனிந்துவரும் வேளையிலே, கட்டுநாயக்காவிலே புலிகள் நடத்திய தாக்குதல், சமாதானத்தை வெகு தொலைவுக்குத் தள்ளிவிட்டது -

பயங்கர வாதத்தையும் பயங்கர வாதிகளையும் ஒரேயடியாக ஒழித்துக்கட்டுவதற்கு நாட்டு மக்கள் அனைவரும் அரசின் பின்னால் அணிதிரள வேண்டும் -

இத்தகைய தகவலையும் ஆலோசனையையும் வெளியிட்டவர் நாட்டின் பிரதமமந்திரியான ரத்னசிறி விக்கிரமநாயக்கா!

எக்காரணத்தைக் கொண்டும் விடுதலைப் புலிகள் மேல் விதிக்கப்பட்ட தடை நீக்கப்படமாட்டாது என்றும் -

எமது நாட்டின் உள் விவகாரங்களிலே அந்நிய நாடொன்று அநாவசியமாகத் தலையிடுவதைப் போன்றே நோர்வேயின் சமாதான முயற்சிகள் அமைந்துள்ளன -

என்றெல்லாம் சொன்னதுடன் நிற்காமல் -

போரைத் தொடர்வதற்கும், "தீர்வு" என்ற பெயரில் தமிழ் மக்கள் மீது ஏதோ ஒன்றைத் திணிப்பதற்கு முயன்றும் வந்த பிரதமர்தான் - தன் "அந்தரங்கங்களையும் அபிலாஷைகளையும்" மனதிற்குக் கொண்டு -

சமாதானத்தை விரும்பும் "தேசியவாதி"யாகத் தன்னைக் காட்டிக்கொள்வதற்கு -

கட்டுநாயக்காச் சம்பவத்தைக் "கறாரா"கப் பயன்படுத்தியிருக்கின்றார்!

சமாதானம் "காணாமற்போய்விட்டது" என்பது உண்மைதான்!

ஆனால் அதைக் "கடத்திக்" கொண்டு போனவர்கள் புலிகள் அல்லர்!

ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தி -

நான்கு மாதங்களாக - நேர்மையான முறையிலே அதை நடைமுறைப்படுத்தி -

அரச படைகள், வலிந்து சண்டைக்கிழுத்த வேளைகளிலெல்லாம்- "தாக்கும்" போரிலே ஈடுபடாமல், தம்மைக் "காக்கும்" போரிலே மட்டும் ஈடுபட்ட விடுதலைப் புலிகள் -

வெளிநாட்டு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவும், நீதியான தீர்வை நோக்கி முன்னேறவும் என்றுமே தயாராக இருப்பதாகவும் ஒன்றுக்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களிலே மிக மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் கூறிவந்த விடுதலைப் புலிகள் -

தம்முடன் இணைந்து - சமாதானத்தைத் தேடிக் "கண்டுபிடிப்பதற்கு" அரசைத் தூண்டுவதற்காகவே இப்படி ஒரு பாரிய தாக்குதலை நடத்தினார்கள் என்றுதான் "சமாதான விரும்பிகள்" கருதுகிறார்கள்!

புலிகளின் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கினால் -

அவர்கள் தங்களைப் பலப்படுத்திக் கொள்வார்கள் - தடையை நீக்கும்படி இந்தியா - அமெரிக்கா - இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு அழுத்தம் கொடுப்பார்கள் - அழுத்தம் கொடுத்துக் கொண்டே தங்களை வளர்த்தும் கொள்வார்கள் -

என்றெல்லாம் தடை நீக்கத்தின் "பாதக" விளைவுகளைப் பற்றி பலமாகச் சிந்தித்துப் பயமும் பதற்றமும் அடையும் -

பிரதமரும் அவரின் "உள்வட்டத்"தினரும் அவர்களின் பிடியிலிருந்து விடுபட முடியாமல் திணறும் ஆட்சியினரும் -

அதன் "சாதக" விளைவுகளைப் பற்றி ஒரு சிறிதளவாவது சிந்திப்பதற்கு ஏன் மறுக்கிறார்கள்?

போரை நிறுத்துவதற்கு -

பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு -

நீதியான - நியாயமான தீர்வைக் காண்பதற்கு -

அப்படியான தீர்வைக் காணும்போது, "தமிழ் ஈழ"க் கோரிக்கையைக் கைவிடுவதற்கு -

தங்களை அரசும் அரசைத், தாங்களும் நம்பாதிருப்பதால் -

இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வெளிநாட்டு நடுவரின் தலைமையில் - வழிகாட்டலில் மேற்கூறிய அனைத்தையும் சாத்தியமாக்குவதற்குச் சித்தமாயிருக்கும் புலிகளை -

- நம்பகத் தன்மை அற்றவர்கள் - பிடிவாதக்காரர்கள் - பயங்கரவாதிகள் - சரியான சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்து நாட்டையே துண்டாடுவதற்குத் திட்டமிட்டிருப்பவர்கள் - என எத்தனை நாளைக்கு அரசு சொல்லிக் கொண்டிருக்கப் போகின்றது?

இனப்பிரச்சினையின் ஒவ்வொர் அம்சத்தையும் மிகவும் துல்லியமாகச் சர்வதேச சமூகம் அறிந்து வைத்திருக்கும் இவ்வேளையில் -

நாட்டைப் பிளக்காமல், தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளை எவ்வாறு பூர்த்தி செய்யலாம் என்பதைப் பற்றி ஆக்கபூர்வமான கருத்துக்களையும் சர்வதேச சமூகம் உருவாக்கி வரும் இவ்வேளையில் -

புலிகள் ஒத்துழைக்க மாட்டார்கள் - எல்லாவற்றையும் குழப்பியடித்து விடுவார்கள் எனக் "கிளிப்பிள்ளை" பாடம் படிப்பது -

பொருத்தமற்றது மட்டுமல்ல; தமிழ் பேசும் மக்களின் விருப்பத்திற்கு மாறானதுங்கூட!

அரசின் சொல்லுக்கும் செயலுக்கும் விரிவுரையும் விளக்கவுரையும் நயப்புரையும் செய்து தம்மையும் விளம்பரப்படுத்திக் கொள்வோர் -

தமிழ் பேசும் மக்களினதும் - நாட்டினதும் நன்மையையும் முன்னேற்றத்தையும் கருத்திற்கொண்டு பேச்சுவார்த்தையில் ஈடுபடும்படி அரசுக்கு 'இடித்துரைக்க' முன்வரவேண்டாமா?

- சித்தன்



யாழ்.மத்திய கல்லூரியின் முறைசாராக் கல்விப் பிரிவினர் நடத்திய பத்திரிகையாளர் பயிற்சி, கணனிப் பயிற்சி ஆகிய பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற நீதிபதி மு. திருநாவுக்கரசு மாணவர்களால் வெளியிடப்பட்ட 'இறகுகள்' என்னும் சஞ்சிகையை கல்லூரி அதிபர் க.இராசதுரையிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (ஐ)

### விமானப்படை இழப்புகளை மதிப்பீடு செய்ய

# இஸ்ரேல்-உக்ரேனிய அதிகாரிகள் கொழும்புக்கு வருகின்றனர்

கொழும்பு,ஜூலை31

கட்டுநாயக்கா விமானத்தளம் மீதான தாக்குதலின்போது விமானப் படைக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்து மதிப்பீடு செய்வதற்கென இஸ்ரேலிய, உக்ரேனிய விமானப்படை அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று அடுத்த சில தினங்களில் கொழும்பு வரவுள்ளது.

விமானப்படையினரின் பாவனையில் இருக்கும் 'கிபிர்' விமானங்கள் இஸ்ரேலிலிருந்தும், 'மிக்' விமானங்கள் மற்றும் எம்.ஐ-17, எம்.ஐ-24 ரக தாக்குதல் ஹெலிகள் உக்ரேனில் இருந்தும் கொள்வனவு செய்யப்பட்டவை.

எனவே கட்டுநாயக்கா விமானத்தளத்தின் மீதான தாக்குதலின் போது முற்றாக அழிந்த விமானங்கள், சேதமடைந்த விமானங்களின் பெறுமதிகளை மேற்குறிப்பிட்ட இரண்டு நாடுகளின் பிரதிநிதிகளே மதிப்பீடு செய்ய முடியும் எனச் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்தே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கொழும்பு வருவதாகவும் -

இலங்கைக்கான பயணிகள் விமான சேவையை சில சர்வதேச விமான நிறுவனங்கள் இடைநிறுத்தியுள்ளதை அடுத்து இந்த அதிகாரிகளின் வருகை தாமதப்படுவதாகவும் - செய்திகள் தெரிவிக்கின்றன.

(க-7)

## மனித உரிமைக்குழு அதிகாரி நாளை காங்கேசன் செல்கிறார்

யாழ்ப்பாணம்,ஜூலை31

காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமுக்கு நாளை புதன்கிழமை சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடவுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி என்.ஜீவேஸ்வரா உணவு மற்றும் கடிதங்களையும் அவர்களிடம் கையளிப்பார்.

உறவினர்கள் நாளை புதன் கிழமை காலை உணவு மற்றும் கடிதங்களைத் தம்மிடம் ஒப்படைக்கலாம் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

(க-10)

### நாளை

ஆடி 16
புதன்கிழமை
திதி: துவாதசி
காலை 07.29 வரை.
நட்சத்திரம் : மூலம்
பிற்பகல் 4.10 வரை.
பிரதோஷ விரதம்
சுபநேரம் : 4.33 - 6.03
ராகுகாலம் : 12.03 - 1.33
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

அடிப்படையின் மீது எழும்பாத சுவரும், அனுபவத்தின் மீது எழும்பாத ஆலோசனையும் வலுவற்றவை.

கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!

ஓரடி வைக்கு முன்
ஒரு நிமிடம் சிந்தியுங்கள்!



# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமக்கள் தேவை

உள்நாட்டில், வெளிநாட்டில் தொழில்புரியும் மணமகன்மாருக்கு மணமக்கள் தேவை. 30வயதுக் குட்பட்டவராக இருத்தல் விரும்பத்தக்கது. விரும்புவோர் முழுப்போட்டோ, குறிப்புகளுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்: நாகலிங்கம் கந்தையா, சோமசுந்தரம் வீதி, ஆனைகோட்டை. (90477)

## தவறிவிட்டது

கும்பலை, அளவெட்டி கிழக்கு எனும் முகவரியைச் சேர்ந்த வில்வ ராஜா டெனிஷன் என்பவரது விசேட அ.அட்டை (0907012752) 20.7.2001 அன்று அளவெட்டியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கரன் பார்மஸி, கே.கே.எஸ்.வீதி, தாவடி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (90623)

கனகசபை ஒழுங்கை, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சாந்தினி சின்னத்துரை என்பவருடைய தே.அ.அ.(இல.646802954V), வி.அ.அ. (இல.0902042413) என்பன வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்மன் கோயிலில் (நாச்சிமார் கோயில்) தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ்ப்பாணம் 520, கஸ்தூரியார் வீதியிலுள்ள V.K.V. தொலைத்தொடர்பு நிலையத்தில் ஒப்படைத்துதவவும் (90621)

சதாபுரம், இத்தாவில் பளையைச் சேர்ந்த மார்க்கண்டன் ஜெயவதனன் ஆகிய எனது தே.அ.அ. (இல. 682330716V), விசேட அ.அ (இல. 0915000058) என்பன பண்டத்தரிப்புப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். மார்க்கண்டன் J.P. "மதிபதி", மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய். (90641)

பிறேமாலதி குணரெட்னம் என்பவருடைய தே.அ.அ. (இல.485952993V), விசேட அ.அ. (இல. 091039253) என்பன யாழ்.பஸ் நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சிவானந்தா கபே, 648, பருத்தித்துறை வீதி, நல்லூர் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (90636)

## விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் ஆயர் கடவை ஆலயத்திற்கு அருகிலுள்ள காணியில் தேக்கமரங்கள் விற்பனைக் குண்டு. தொடர்பு:-இ.விக்னராசா, புன்னாலைக்கட்டுவன் தெற்கு. (90628)

BLACK STONE எஞ்சின் H.P 26 உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- சிவம், சங்கரத்தைச் சந்தி, (அம்பாள இரும்பகத்துக்கு அருகில்) (90630)

**U.P.S. POWER SAVER , 500 WATTS, NOKIA HAND PHONE, WITH ANATENNA LAMINATING FILM -125 MIC A3 SIZE, KOKUVIL JUNCTION T.P.2961**

**(90499)**

1 1/2 குதிரை வலு A/C மோட்டருடன் றேடியேற்றரும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- M. சிறி, 185, 2ஆம் குறுக்குதெரு, யாழ்ப்பாணம். (90611)

## புறொயிலர் குஞ்சு விற்பனைக்கு

பகிறா இன புறொயிலர் குஞ்சுகள உடன் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- வி.குணபாகன், 343,காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் அல்லது 609, காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.T.P.3353

(90640)

## பிறந்தநாள் வாழ்த்து

31-07-2001

**ஸ்ரீ சரவணபவன் பிரதீபன்** அவர்கள்

*தனது 25ஆவது பிறந்த தினத்தை*

**இன்று (31-07-2001) செவ்வாய்க்கிழமை சுகாதாரப் பணிமனையில் மிக விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அனைத்து ஊழியர்களும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றார்கள்.**

*ஊழியர்கள் சார்பில்*

க.லங்கேஸ்வரன்.

*இல.40, பழம் வீதி,*
*கந்தர்மடம்.* (90639)

---

**T.R.R.O.** நிறுவனத்தின் அனுசரணையுடன்
நெல்லிடி சனசமூக நிலையம் நடத்தும்
கணனிப் பயிற்சி நெறியின்

## அங்குரார்ப்பண விழா

*காலம்:-* 2001-08-02 வியாழக்கிழமை காலை 8.30 மணி.
*இடம்:-* தட்டச்சுப் பயிற்சி நிலையம்,
முருகமூர்த்தி கோயிலடி, நெல்லியடி.

அங்குரார்ப்பணம் செய்து வைப்பவர்:
**திரு.சி.சிவராஜா** அவர்கள்
(கல்விப் பணிப்பாளர், வடமராட்சி வலயம்)

***அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.***

பயிலுநர்கள் கவனத்திற்கு:
விண்ணப்பித்த அனைவரையும் இன்று (31.07.2001) செவ்வாய்க் கிழமை மாலை 5.00 மணிக்கு முன்னர் தங்கள் பதிவினை மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். புதிய விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(90631) - **நெல்லியடி சனசமூக நிலையத்தினர் - (N.C.C)**

---

# அழைப்புக் கட்டளை

இல.16 பிரிவு 55 (1)

**யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்**

ஜெயகணேஷ் பெண் மாலினி,
(இரத்தினசபாபதியின் மகள்)
218, பலாலி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

வழக்காளி

வழ. இல. மணநீக்கம/ 250

எதிராக

வடிவேலு ஜெயகணேஷ்
131/4, பருத்தித்துறை வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தற்போதைய முகவரி தெரியாது.

எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி பிராதில் கோரிய நிவாரணங்களைப் பெறுவதற்காக இந் நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2001ஆம் ஆண்டு ஆவணி மாதம் 31ஆம் நாளன்று, அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்துவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறு கட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்துகொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும்படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விபரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
து.சிறீமோகன்
*பதிவாளர்*
*மாவட்ட நீதிமன்றம்,*
*யாழ்ப்பாணம்.*

வரைந்தது
**லிங்கா துரைராஜா,**
வழக்காளியின் சட்டத்தரணி.

**குறிப்பு:-** விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ் வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

*2001ஆம் ஆண்டு ஆடி மாதம்*
*26ஆம் நாளாகிய இன்று.* (90637)

து.சிறீமோகன்
கையொப்பம், பதிவாளர்

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பிரதேச செயலக அலுவலரும்
சிறந்த விளையாட்டு வீரருமான

**திரு.இளையதம்பி உதயகுமார்**


அவர்கள் விளையாட்டு அமைச்சினால் மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் தட்டெறிதலில் முதலாமிடத்தைப் பெற்று மாகாணமட்டத்தில் சாதனை புரிந்தமைக்கு எமது வாழ்த்துக்களைக் கூறிப் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பிரதேச செயலரும்,**
**செயலக அனைத்து**
**அலுவலர்களும்.**

பிரதேச செயலகம்,
கரவெட்டி. (C/17638)

---

## நல்லூர்க் கந்தன் உற்சவ கால அன்னதானம்



### மூத்ததம்பி அன்னதான மடம்

கொடியேற்ற தினத்திலிருந்து அன்னதானம் நடைபெற்று வருகிறது.
பூங்காவனத் திருவிழா வரை தினமும் அன்னதானம் செய்யப்படும்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

(C/17631) - கந்தன் அடியார்கள்

---

# மரண அறிவித்தல்

## திருமதி இராசமணி நவரத்தினம்

தவாடியைச் சேர்ந்த காலஞ்சென்ற நவரத்தினத்தின் அன்பு மனைவி திருமதி இராசமணி நவரத்தினம் கடந்த 26.07.2001 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மனோன்மணி, விஜயலட்சுமி, பாலசுப்பிரமணியம் (கொழும்பு), நடராசா எபரமநாதன் (**BITSMAN** கல்வி நிலையம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இரத்தினசிங்கம், சிவசுப்பிரமணியம் (**C.C.T.H. JAFFNA**), சோதிப்பிள்ளை (இணுவில்), நளாயினி (ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தி), ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (26.07.2001) வியாழனன்று இணுவில் மேற்கில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மகன்மார்:N.பரமநாதன்.
N.பாலசுப்பிரமணியம்.

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.* (90629)

---

# மனத்துருகும் 31ம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



தோற்றம்
18
-
05
-
1928

மறைவு
01
-
07
-
2001

## *அமரர்.இராமலிங்கம் வேலாயுதர் அவர்கள்*

(ஓய்வு பெற்ற அதிபர், முன்னைநாள்
கைதடி - நாவற்குழி.
கிராமசபைத் தலைவர்)


**எங்கள் குடும்பத்தின் தெய்வமாக**
**பண்பின் உறைவிடமாய் பாசத்தின்**
**- இருப்பிடமாய்**
**அன்பூட்டி, அறிவூட்டி ஆதரவாய்**
**எம் சொத்தாகவிருந்த தந்தையே**
**ஆறாத பிரிவுத்துயரில் எம்மை**
**- ஆழ்த்தினாலும்**
**அழியாத நினைவுகளுடன் என்றும் எம்**
**உள்ளத்தின் உணர்வில் இருப்பீர்கள்**

**எமது தந்தையாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று பகல் 11 மணிக்கும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.**

**மலரகம்,**
**கைதடி மத்தி,**
**கைதடி.**

**குடும்பத்தினர்**

# நெஞ்சை விட்டு அகலாத
# 10ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



## அமரர் வீ.எம்.கணபதிப்பிள்ளை
*(வீ.எம்.கே.ஜுவல்லர்ஸ் - சாவகச்சேரி)*

**தோற்றம்:** 23.04.1913 **மறைவு:** 31.07.1991

எங்கள் பாசமிகு தந்தையே!
ஆண்டுகள் ஒவ்வொன்றும்
எம்மைவிட்டு அகலுகையில்
எம்மிடத்தில் மீண்டுமோர் புதிய செய்தி தெரிவிக்க!
உற்றார், உறவினரோடு
உயர்வாக வாழ்ந்த எங்கள்
உறையூரை விட்டகன்று
மற்றோர் ஊர் தன்னில்
மனங்கலங்கி வாழ்ந்தாலும்
தங்களது ஆசியெனும்
உற்ற துணை நம்பி நாம்
இன்பமாய் வாழ்கின்றோம்!

**- வீ.எம்.கே.குடும்பம்**
**சவகச்சேரி.**

*வீ.எம்.கே.ஜுவல்லர்ஸ்,*
*96/1, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தொலைபேசி இல.:
070 - 212989
070 - 212244

(90509)

## 13ஆவது விண்ணக வாழ்வின் நிறைவில்....

மலர்வு 20 ★ 10 ★ 1968



உதிர்வு 31 ★ 07 ★ 1988

### ஜெயந்தி ஜெயரட்ணம்

*(உடுவில் மகளிர் கல்லூரி - முன்னாள் மாணவி)*

குடும்பத்தின் ஒளிவிளக்காய்
குன்றாத மணிவிளக்காய்த் திகழ்ந்த
எங்கள் அன்புச் செல்வமே!
ஆண்டுகள் பதின்மூன்று நகர்ந்தாலும்
ஆறாதம்மா உன் பிரிவுத்துயர்!

*என்றும் உன் நினைவுடன்:*
அப்பா, அம்மா,
அண்ணாமார், அண்ணிமார்.

*இராமலிங்கம் வீதி,*
*உடுவில்.* (90558)

## 31ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

மலர்வு 18 ★ 05 ★ 1928



உதிர்வு 01 ★ 07 ★ 2001

எமது கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் செயலாளரும் கைதடி மேற்கு குமரன் விளையாட்டுக் கழகத்தின் தலைவருமான

**திரு. வேலாயுதர் தயாளன் அவர்களின்**

பாசமிகு தந்தையார்

### அமரர் இராமலிங்கம் வேலாயுதர்

*(ஓய்வு பெற்ற அதிபர்; முன்னாள் தலைவர், நாவற்குழி, கைதடி கிராம சபை)*

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

- நிர்வாகத்தினர்,
கைதடி மேற்கு சனசமூக நிலையமும்,
குமரன் விளையாட்டுக் கழகமும்.

(90566)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

### வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 18 - 03 - 1923



மறைவு 01 - 07 - 2001

### திருமதி மார்க்கண்டு யோகம்மா

எழுபத்தியேழு ஆண்டுகள் நிறைவான வாழ்வு ழ்ந்து, பெற்ற பிள்ளைகள் ஒன்பதுடனும் அன்புச் சகோதரிகளுடனும், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பெறாமக்களுடனும் வாழ்ந்தீங்கள் அம்மாவே! ஆசார பக்தியுடன் - ஞானவைரவப் பெருமான் ழிபாட்டுடன் விண்ணுலகடைந்த அன்னையே, உன்னை வணங்குகிறோம்.

**ஓம் சாந்தி... சாந்தி... சாந்தி**

01-07-2001 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது அன்னையின் வீட்டுக்கிருத்தியம் இன்று (31-07-2001) செவ்வாய்க்கிழமை 10 மணியளவில் நடைபெறும். அன்னாரின் வீட்டுக்கிரியையில் கலந்துகொள்வதுடன் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*61, சங்கிலியன் வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (90528)

பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரிகள், பேரப்பிள்ளைகள்.

### கிழக்குப் பல்கலையில் சங்கீத கலைமாணி - பட்டப்படிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை31

சுவாமி விபுலானந்தர் இசை, நடனக் கல்லூரி கிழக்குப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளதை அடுத்து -

கிழக்குப் பல்கலைக்கழகம் சங்கீத கலைமாணி, நடனக் கலைமாமணி ஆகிய பட்டப்படிப்பு நெறிகளை ஆரம்பிக்க இருக்கின்றது.

இந்தப் பட்டப்படிப்பு நெறிகளை பின்பற்றவிரும்பும் மாணவர்கள் தமது விண்ணப்பங்களை அடுத்த மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பும்படி கேட்டுகப்பட்டுள்ளது.

இந்தக் கற்கைநெறி தொடர்பான விவரங்களைப் பெற விரும்பும் மாணவர்கள் 50 ரூபா காசுக்கட்டளையுடன் (மணியோடர்) சுய விலாசம் இடப்பட்ட கடித உறைகளை அனுப்புமாறு கிழக்குப் பல்கலைக்கழக பதில் பதிவாளர் அறிவித்துள்ளார். (க-3)

### வட்டு.ஆஸ்பத்திரி பிற்பகல் வேளையிலும் இயங்குகிறது

சண்டிலிப்பாய்,ஜூலை31

வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலையில் தற்போது பிற்பகல் வேளையிலும் நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. இவ்வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியான டாக்டர் சி.சதாசிவம் கடந்த ஒருவருட காலத்துக்கு மேலாக முற்பகல் வேளையில் இவ் வைத்தியசாலையிலும், பிற்பகல் வேளையில் வட்டுக்கோட்டை மாவடிச் சந்திக்கு அருகில் உள்ள வட்டுக்கோட்டை அரசினர் மருந்தகத்திலும் கடமையாற்றிவந்தார்.

தற்போது தொல்புரம் அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியை வட்டுக்கோட்டை அரசினர் மத்திய மருந்தகத்துக்கும் பதில் பொறுப்பதிகாரியாக யாழ்.சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் நியமனம் செய்துள்ளார்.

இதனைஅடுத்து வட்டுக்கோட்டை கோட்டைக்காடு பகுதியில் உள்ள அரசினர் கிராமிய வைத்திய, வைத்தியசாலையில் பிற்பகல் வேளையிலும் நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

பிற்பகல் இரண்டு மணிமுதல் நான்கு மணி வரை இங்கு நோயாளர்கள் சிகிச்சை பெற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-135)

### பளைப் பகுதி தாய்மாருக்கு பால்மா முத்திரை

தென்மராட்சி,ஜூலை31

பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த பாலூட்டும் தாய்மாருக்கான பால்மா முத்திரை வழங்குவதற்கான நடவடிக்கைகள் பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 2000 ஜூன் முதலாம் திகதிக்குப் பின்னர் (01.06.2000) பிறந்த பிள்ளைகளின் தாயார் பிள்ளையின் பிறப்புச் சான்றிதழைச் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தைப் பளைப் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் பகுதியில் தங்கியுள்ள மக்கள் யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையில் இயங்கும் பளைப் பிரதேச செயலகத்திலும், வடமராட்சிப் பகுதியில் தங்கியுள்ள மக்கள் புலோலியில் இயங்கும் பிரதேச செயலக உப அலுவலகத்திலும் 'இ' பங்கீட்டு அட்டை வைத்திருப்போர் விண்ணப்படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-117)

### திருட்டு

சுழிபுரம்,ஜூலை31

சித்தன்கேணிச் சந்திக்கு அருகிலுள்ள சிற்றுண்டிச் சாலையில் புதன்கிழமை இரவு ஓடு பிரித்து உட்புகுந்த திருடர்கள் பகோடா, மிக்சர் பைக்கற்றுக்களை அபகரித்துச் சென்றுள்ளனர். (க-28)


### சோதிடம்

*கம்பியூட்டர் மூலம் ஜாதகங்கள் துல்லியமாகக் கணித்தும், எழுதியும் கொடுக்கப்படும்.*

*எண்சோதிடம், திருமணப் பொருத்தம் என்பனவும் பார்க்கப்படும்.*

*சோதிடர்:*
**நாகலிங்கம் கந்தையா**
சதுர்ஷிகா ஜோதிட நிலையம்
*சோமசுந்தரம் வீதி,*
*ஆனைக்கோட்டை.*


## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்



### 'சிந்தித்தே வேலைச் செலுத்து'

பாரோங்கு புகழ்படைத்த பைந்தமிழ் நல்லையிலே
சீரோங்க வீற்றிருக்கும் செவ்வேலா - போரோங்கி
நற்றமிழர் தேசமிங்கு நலிவடையும் நிலையகலச்
சிந்தித்தே வேலைச் செலுத்து!

- மட்டுவில் செ.சுதாகரன் -

### வந்தருள எவருண்டு?

எந்த நகைகூட்டி சங்கை இசைமீட்டி
தாவில்... மனந்தந்து வரவேற்போம்
தங்க ரதமேறி சர்வ பலஞ்கூட்டி
சாந்தி தர நீயும் அருளோனும்
நிந்தை நிலைமாற நீச நிழலோட
நீதி நீகர் வேலைத் தருவாயா? - தெம்பு என?
நாங்கள் நெஞ்சைச் சுமை சாய்த்து
நிம்மதியின் காப்பந் சுமப்போமா?

கோடி எழில் மின்னும்... கொஞ்சுமிகு மாதர்
கூட... வெளிவீதியடி வந்து
சொல்லும் கண் கூட்டு குத்து விளக்கிட்டு
கோலமிடு எங்கள் நிலம்தின்று
வாடிவீழும் எங்கள் தொன்ம விருட்சத்தில்
வார்த்துவிடு ஞான அமுதாற்று
வானம் வரை ஓங்கி நாமும் எழ.... ஊழை
மாற்ற.... உனையன்றி எவருண்டு?

- த.ஜெயசீலன் -

### கோடி அருள் தந்திடுவாய்!

தேடி உனைச் சரண்புகுந்தேன் - எங்கள்
தேச வேல் முருகா - உனைப்
பாடித் தினமும் துதி செய்வேன் - எங்கள்
துயரங்களை துடைப்பாய் வேலா
ஆடி அசையும் மயிலேறி - எழில்
காட்சி தரும் முருகையா
கூடியுனைப் போற்றுகின்றோம்
கோடி அருள் தந்திடுவாய்!

- எம்.துஸ்யந்தன் -
கோண்டாவில் வடக்கு.

### இடர் தீர்ப்பாய் வடிவேலா!

அன்றசுரர் தமையொழித்து
அமரர்க்கருள் புரிந்தவனே!
உன்னையன்றி யாரிடத்தில்
எம்குறையை உரைத்திடுவோம்?
உன்னையன்றி விடிவெமக்கு
ஆரளிப்பார் கந்தவேளே?
என்றெமது இடர் தீர்த்து
அருள்புரிவாய் பெருமானே!

- நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன் -

### நலமொன்று காட்டுவாயா?

ஆண்டாண்டு தோறும் அழுதபுலம்புமெங்கள்
அவலங்கள் தெரியவில்லையா?
பண்டு தொட்டு நாங்கள் பதைபதைத்து விம்மும்
பரிதவிப்புத் தெரியவில்லையா?
செண்டாடி செடிலாடி மண்டாடி வரும் பக்தர்
கொள்கையது புரியவில்லையா?
எண்டோளர்கள் வலிமைமிகு நல்லூருக் கந்தனே
நலமொன்று காட்டுவாயா?

- ந.மணிவண்ணன் -
யாழ்ப்பாணம்.

## மனச்சாட்சிப்படி நடந்தால் பிரச்சினையே வராது

# பொறுப்பான பதவிகளை வகிப்பவர்கள் சமுதாயப் பணிகளிலும் ஈடுபடவேண்டும்

## றோட்டறிக் கழக வைபவத்தில் நீதிவான் விக்னராசா உரை

யாழ்ப்பாணம்,ஜுலை31

குடாநாட்டில் பொறுப்பான பதவிகளில் உள்ளவர்கள் தமது பணிகளுக்கு அப்பால் சமுதாய மறுமலர்ச்சிப் பணிகளிலும் ஈடுபட வேண்டும் என்று யாழ்நீதிவான் ஆர்.ரி.விக்னராசா தெரிவித்தார்.

யாழ்.றோட்டறிக் கழகத்தின் புதிய நிர்வாகிகள் பதவியேற்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

யாழ்.றோட்டறிக் கழகத்தின் புதிய தலைவரின் இல்லத்தில் இடம்பெற்ற இந்த வைபவத்தில் நீதிவான் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் பொறுப்பான பதவிகளில் உள்ளவர்களும், புத்திஜீவிகளும் தமது பதவிகளுடன் தொடர்புடைய பணிகளை மட்டுமே செய்கிறார்கள் அதற்கு அப்பால் அவர்கள் சமுதாயப் பணிகளில் தம்மை இணைத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

தனது பதவியை மட்டும் பாதுகாத்துக் கொண்டு அவர்கள் இருப்பதால் சமுதாயம் எந்தப் பயனையும் பெறப் போவதில்லை. எனவே அவர்கள் தமது அனுபவங்களை சமுதாய மறுமலர்ச்சிக்கும் வழங்கவேண்டும்.

### கலாசாரங்கள் அழிந்து வருகின்றன

எமது கலாசாரங்கள் அழிந்து கொண்டு போகின்றன. இளைஞர்கள் மத்தியில் கட்டுப்பாடின்மை காணப்படுகின்றது. இந்த நிலைக்கு இளைஞர்களையோ, முதியவர்களையோ, ஆசிரியர்களையோ, பெற்றோரையோ குறை கூறமுடியாது. அனைவரும் இந்த நிலைமைக்குப் பொறுப்பு ஏற்க வேண்டும்.

இளைஞர்களை சமயப் பணியில் ஈடுபடச் செய்வதன் மூலம் இந்த நிலைமையைச் சீர்செய்யலாம். அந்தப் பணியை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு சகலரது கைகளிலும் உள்ளது.

சகலரும் தமது பணிகளை மனசாட்சிப்படி செய்ய முன் வரவேண்டும் அரச அதிபராக இருந்தால் என்ன, நீதிபதியாக இருந்தால் என்ன தமது பணிகளை மனச்சாட்சிப்படி மேற்கொண்டால் இன்றைய அவல நிலை சமுதாயத்துக்கு ஏற்படாது. மனச்சாட்சிக்கு விரோதமாகச் செயற்படத் தொடங்கும் போதுதான் தவறு ஆரம்பமாகின்றது. அந்தத் தவறு விசுவரூபம் எடுத்து சமுதாயத்தையே பாதிக்கின்றது.

### விபத்தை நாமே தடுக்க முடியும்

குடாநாட்டில் நாளாந்தம் விபத்துகள் அதிகரித்து வருகின்றன. சட்டம், ஒழுங்கை நிலைநாட்டக் கூடிய போதிய சக்தி காவல்துறைக்கு இங்கு இல்லை. காவல்துறையின்தான் விபத்துக்களை தடுக்க வேண்டுமா? நாமே விபத்தைத் தடுக்க ஏன் முன்வரக் கூடாது?

போக்குவரத்து விதிகளைச் சகலரும் தமது மனச்சாட்சிப்படி அனுசரித்து நடந்தால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பே இல்லை. பொதுமக்கள் தமது மனச்சாட்சிப்படி செயற்பட்டால் நீதிமன்றமும் தேவையில்லை; காவல் துறையும் தேவையில்லை.

முக்கிய வீதிகளில் இராணுவ வாகனங்கள் வேகமாக ஓடுகின்றன. போர்முனையிலிருந்து இராணுவ வாகனங்கள் வேகமாக வந்தால் அதை ஏற்கலாம். சாதாரண தேவையின் போது இராணுவ வாகனங்கள் கண் மண் தெரியாமல் வேகமாக ஓடுவதை ஏற்க முடியாது.

போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடித்து விபத்துக்களைத் தடுக்க வேண்டிய பொறுப்பை பொதுமக்கள் ஏற்றுக கொள்ளவேண்டும்.

றோட்டறிக் கழகம் போன்ற சமூக அமைப்புக்கள் இந்த விடயத்தில் முக்கிய பங்கை வகிக்கலாம். மக்கள் மத்தியில் போக்குவரத்து விதிகள் குறித்த விளக்கங்களை அளித்து அவர்களுக்கு உதவ இத்தகைய அமைப்புக்கள் முன்வரவேண்டும் - என்றார். (க-3)

## தொழிற்சங்க அமைப்புகளின் ஒன்றியம்

# சம்பள உயர்வு கோரி கொழும்பில் ஆர்ப்பாட்டம்

## வியாழக்கிழமை நடத்த ஏற்பாடு

கொழும்பு,ஜுலை31

வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு ஏற்ப சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் எனக் கோரி தொழிற்சங்க அமைப்புகளின் ஒன்றியம் நாளை மறுதினம் வியாழக்கிழமை கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

சம்பள ஆணைக்குழு புதிய சம்பள விவரத்தைத் தயாரிக்கும்வரை மாதாந்தம் மேலதிக கொடுப்பனவாக 6500 ரூபா வழங்கப்பட வேண்டுமெனக் கோரியே தொழிற் சங்க அமைப்புகள் இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்துள்ளன.

மேலதிக கொடுப்பனவு பற்றி அரசாங்கம் உரிய பதில் தராவிட்டால் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் தொழிற்சங்கப் போராட்டத்தில் குதிக்கப் போவதாக தொழிற் சங்கங்கள் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.

இந்த ஆர்ப்பாட்டம் கடந்த 26 ஆம் திகதி நடத்தப்படவிருந்தது. எனினும் கட்டுநாயக்கா விமானத்தளம் மீதான தாக்குதலை அடுத்து இது ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

## யாழ்.தேர்தல் மாவட்டத்தில்

# தபால் மூல வாக்களிப்புக்கு 1,386 பேர் விண்ணப்பம்

கொழும்பு,ஜுலை31

சர்வஜன வாக்கெடுப்புக்கு தபால் மூலம் வாக்களிப்பதற்கு யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் இருந்து ஆயிரத்து 386 வாக்காளர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள வாக்களிப்பின் போது கடமையாற்றவுள்ள ஊழியர்கள் உட்பட யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் தொகுதியில் இருந்து தபால் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பித்தவர்களில் -

142 பேரின் விண்ணப்பங்கள் பல்வேறு காரணங்களால் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பான விவரம் வாக்காளர்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஆயிரத்து 244 விண்ணப்பதாரிகள் தபால் மூலம் வாக்களிக்கத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (க-6-4)

# கைத்தறி புடைவை விற்பனை நிலையம் நாளை நல்லூரில் திறக்கப்படும்

## உற்சவ காலத்தில் இயங்கும்

யாழ்ப்பாணம்,ஜுலை31

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு யாழ்.தொழில்துறை திணைக்களம் கைத்தறி புடைவைகள் விற்பனை நிலையம் ஒன்றைத் திறக்கவுள்ளது.

நல்லூர் அரசடிச் சந்தியில் உள்ள கைத்தறிப் புடைவைகள் பயிற்சிப் பாடசாலையில் நாளை புதன்கிழமை இந்த விற்பனை நிலையம் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது.

கைத்தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவதற்கும் - உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புடைவைகளைப் பொதுமக்கள் கொள்வனவு செய்வதற்கும் வசதியாக இந்த விற்பனை நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது.

கைத்தறி இயந்திரங்கள் மூலம் தரமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ள உள்ளூர்ப் புடைவைகளை கொள்வனவு செய்வதன் மூலம் உற்பத்தியாளர்களுக்கும் உள்ளூர் பொருளாதார வளர்சிக்கும் பொது மக்கள் ஆதரவு தர வேண்டும் என்று தொழில்துறை திணைக்கள அதிகாரி ஒருவர் கேட்டுள்ளார். (க-6-4)

### சாயி சமித்தியில் ஆன்மீக நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம்,ஜுலை31

யாழ்.பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை பேரயா ஆன்மீக நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

காயத்திரி ஜெபம், இலட்ச அர்ச்சனை, பஜனை, பண்ணிசை, சிறப்புச் சொற்பொழிவு ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறும். நண்பகல் நாராயண சேவையும் நடைபெறும். (ஐ)

### பாடசாலைக்கு தளபாடங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஜுலை31

'போரூட்' நிறுவனத்தினால் அண்மையில் வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயத்துக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பாடசாலைத் தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பாலர் மேசைகள் 50 மற்றும் கதிரைகள் 50 ஆகியனவே இவ்வாறு வழங்கப்பட்டதாக பாடசாலையின் அதிபர் தெரிவித்தார். (க-10)

### முன்பள்ளிகளின் ஆசிரியருக்கு இன்றுகொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஜுலை31

முன்பள்ளி ஆசிரியர்களாகக் கடமையாற்றி தற்பொழுது இடம் பெயர் ஏனைய இடங்களில் முன்பள்ளிகளில் கல்விகற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு உள்ளூராட்சி உதவிஆணையாளர் அலுவலகத்தில் வைத்து வழக்கப்படவுள்ளது.

ஜனவரி மாதம் தொடக்கம் ஜுன மாதம் வரையான 6 மாதங்களுக்குரிய கொடுப்பனவுகளை 'யுனிசெவ்' நிறுவனம் வழங்குகின்றது

உரியவர்கள் இன்று நேரில் வந்து கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (க-10)

### குழந்தை உளவியல் புத்தகங்கள்

யாழ்ப்பாணம்,ஜுலை31

'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் மாநகர அடிப்படைத் தேவைகள் நிகழ்ச்சித் திட்டத்தினால் உருவாக்கப்பட்ட குழந்தை உளவியல் புத்தகங்கள் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தால் 578 குழந்தை உளவியல் புத்தகங்கள் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக அந்த அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-10)

## கல்விச்சாலைக் காட்சிகள்



ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் 'பாட மேம்பாட்டுக் கணிப்பீட்டு உபகரணக் கண்காட்சி' அண்மையில் நடைபெற்றது.

கண்காட்சியில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய்க் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் மங்கள விளக்கேற்றி கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். வலி.கிழக்குப் பிரதேச சபையின் உப தலைவர் யூ.ஏ.எல்.ரவி, வித்தியாலய உப அதிபர் சி.திரிகரன் ஆகியோரையும் படத்தில் காணலாம். *(படம்: அச்சுவேலிச் செய்தியாளர்)*



யாழ். சன்மார்க்க மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனைப் பாடசாலை ஆசிரியர்களான பொ.உதயராசா, செல்வி ரா.வைத்திலிங்கம் ஆகியோர் வரவேற்பதைப் படத்தில் காணலாம். அதிபர் து.நடராஜலிங்கமும் படத்தில் காணப்படுகிறார். இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ். கோட்டக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜகோபால் கலந்துகொண்டார். (ஐ-51)



புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தில் புனரமைக்கப்பட்ட கட்டடத் தொகுதி அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வேலணைக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.தில்லைநாதன் நாடாவை வெட்டி கட்டடத் தொகுதியைத் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் பாடசாலை அதிபர் எஸ்.கே. சண்முகலிங்கம், வேலணை பிரதேச சபைத் தலைவர் ந.கருணாகரகுருமூர்த்தி, தீவகக் கல்விவலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சிவராசா ஆகியோர் காணப்படுகின்றனர். (ஐ-7)



சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி ஆரம்ப பிரிவு வருடாந்த இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி அண்மையில் கல்லூரி அதிபர் ச.சிவனேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. விசேட விருந்தினராகக் கலந்துகொண்ட வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

சண்டிலிப்பாய்க் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலார் ச.கந்தசாமி ஆகியோர் அமர்ந்துள்ளனர்.

*(படம்: சண்டிலிப்பாய்ச் செய்தியாளர்)*

# சமூகக் கல்வி பொது அறிவுப் போட்டி; யாழ்.கல்வி வலயத்தின் முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை31

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே அண்மையில் நடைபெற்ற வலயமட்ட சமூகக் கல்விப் பாடப் பொது அறிவுப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

நான்கு பிரிவுகளாக நடைபெற்ற இப்போட்டியில் பாடசாலைகளின் வகைகளும் நான்காகப் பிரிக்கப்பட்டு அவற்றின் அடிப்படையிலேயே போட்டி நடத்தப்பட்டது.

200 மாணவர்களுக்கு உட்பட்ட பாடசாலைகள் வகை ஒன்றாகவும் 200 தொடக்கம் 500 வரையான மாணவர்கள் கொண்ட பாடசாலைகள் வகை இரண்டாகவும் 500 தொடக்கம் 1000 வரையான மாணவர்கள் கொண்ட பாடசாலைகள் வகை மூன்றாகவும் ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கொண்ட பாடசாலைகள் வகை நான்காகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிரிவுகளிலும் 5 மாணவர்கள் வீதம் மாகாணமட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

### வகை ஒன்று

*தரம் 6 - 7* - முதலாமிடம் - க.ஆனந்தசேகர் (கொக்குவில் நாமகள் வித்தி), இரண்டாமிடம் - து.சுதாகரன் (யாழ்.இளையதம்பி இ.வித்தி), மூன்றாமிடம் - செ.யசோந்தினி (நீர்வேலி சி.சி. த.க.பாடசாலை), நான்காமிடம்:- இ.துஸிகா (கொக்குவில் நாமகள் வித்தி), ஐந்தாமிடம் - இ.இருபாயினி (யாழ். இளையதம்பி இ.வித்தி).

*தரம் 8 - 9* - முதலாமிடம்- யோ.நிரோசா (பத்தமேனி இரட்னேஸ்வரி வித்தி), இரண்டாமிடம் - செ.யசோதரன் (நீர்வேலி சி.சி.த.க பாடசாலை), மூன்றாமிடம் - சு.சுரேஷ்குமார் (கொக்குவில் நாமகள் வித்தி), நான்காமிடம். - அ.திவ்வியா (நீர்வேலி சி.சி. த.க.பாடசாலை), ஐந்தாமிடம் - த.புஷ்பகலா (கலட்டி மெமி. த.க பாடசாலை), *தரம் 10 - 11* - முதலாமிடம் -அ.சிராணி அனுசியா (நல்லூர் தெற்கு விக்னேஸ்வராவித்தி), இரண்டாமிடம் - த.மிதுனா(கந்தர்மடம் சைவப்பிரகாசவித்தி), மூன்றாமிடம் - அ.அரவிந்தன் (கந்தர்மடம் சைவப்பிரகாசம வித்தி), நான்காமிடம் - சி.கோகுலன் (கொழும்புத்துறை துரையப்பா வித்தி), ஐந்தாமிடம் - த.விஜிதரன் (கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தி).

### வகை இரண்டு

*தரம் 6-7* முதலாமிடம் - அ.பகிர்தா (கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி), இரண்டாமிடம் - சி.நுகுணாபி (கொடடி நமச்சிவாயம் வித்தி), மூன்றாமிடம் -ச.காஞ்சனா (நல்லூர் இ.த.பெ.பாடசாலை), நான்காமிடம் - இ.பவித்ரா (கோப்பாய் சரவணபவானந்த வித்தி), ஐந்தாமிடம் - ச.தாரினி (கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி).

*தரம் 8-9*, முதலாமிடம் -ப.பத்மிநிருபா (கொழும்புத்துறை இம. வித்தி), இரண்டாமிடம் - வி.கிருஷானந்தன் (வண்ணை நாவலர் ம.வி), மூன்றாமிடம் - க.ஹரிகரன் (கொக்குவில் இராமகிருஷ்ணா வித்தி), நான்காமிடம் - யோ.பிரன்ராவானுஜி (அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் வித்தி), ஐந்தாமிடம் - சி.அன்ரலக்சா (பாசையூர் புனித அந்தோனியார் பெண்கள் வித்தி).

*தரம் 10 - 11* முதலாமிடம் - செ.சுவர்ணா (கோப்பாய் ம.வி.), இரண்டாமிடம் - பூ.மைதிலி (செங்குந்த இந்துக்கல்லூரி), மூன்றாமிடம் - த.நிஷாந்தன் (புத்தூர் புத்த கலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தி), நான்காமிடம் - லி.ரேகா (கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி), ஐந்தாமிடம் - சி.வாசுகி (அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் வித்தி).

*தரம் 12-13* முதலாமிடம் - க.அரவிந்தன் (செங்குந்த இந்துக் கல்லூரி), இரண்டாமிடம் - ஆ.யசோதரன் (கோண்டாவில் இராம கிருஷ்ண ம.வி), மூன்றாமிடம் - ஜெ.மதியழகி (யாழ்.புனித ஜேம்ஸ் மகளிர் வித்தி), நான்காமிடம் - யே.மதிவாணி (யாழ். புனித ஜேம்ஸ் மகளிர்வித்தி), ஐந்தாமிடம்- செ.சகுந்தலாதேவி (அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் வித்தி).

### வகை மூன்று

*தரம் 6 - 7* முதலாமிடம் - சந்ரோசன் (ஸ்ரான்லிக் கல்லூரி), இரண்டாமிடம் - ப.துளசி (உரும்பிராய் சைவத் தமிழ் வித்தி), மூன்றாமிடம் - ச.தனிஸ் (அச்சுவேலி மத்திய கல்லூரி), நான்காமிடம் - சி.லக்சனா (அத்தியார் இந்துக் கல்லூரி), ஐந்தாமிடம் - ந.துர்க்கா (பெரியபுலம் ம.வி.).

*தரம் 8 - 9* முதலாமிடம் - சி.கமலதசன் (அச்செழு சைவப்பிரகாச வித்தி), இரண்டாமிடம் - பூ.ராஜ் வினோத் (அச்செழு சைவப்பிரகாச வித்தி), மூன்றாமிடம் - சி.வினோரா (உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி), நான்கா மிடம் - பா.வினாயா (உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி), ஐந்தாமிடம் - தே.யுகுனா (ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி), ஸ்ரீ.தயாபரன் (ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி).

*தரம் 10 - 11* முதலாமிடம் - கே. மறிற்றா றேசினி (யாழ்.கன்னியர் மடம் ம.வி), இரண்டாமிடம் - ந.தவராசா (புனித சாள்ஸ் ம.வி.), மூன்றாமிடம் - த.நிவேதிகா (பெரியபுலம் ம.வி), நான்காமிடம் - ச.நிலக்சன் (புனித சாள்ஸ் ம.வி.), ஐந்தாமிடம் - ப.யூட்லின்சன் (புனித சாள்ஸ் ம.வி.)தரம்

*தரம் 12 - 13* முதலாமிடம் - த.சௌரியா (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), இரண்டாமிடம் - ம.கிறிஸ்ரின் (அத்தியார் இந்துக் கல்லூரி), மூன்றாமிடம் - ப.யூட்பிறின்சன் (புனித சாள்ஸ் ம.வி.), நான்காமிடம் - சி.நிஜா (அச்சுவேலி மத்திய கல்லூரி) ஐந்தாமிடம் - சி.ராஜ்குமார் (அச்சுவேலி மத்திய கல்லூரி).

### வகை நான்கு

*தரம் 6 - 7* முதலாமிடம் - த.சஞ்சயன் (யாழ்.இந்து), இரண்டாமிடம் - த.துஷ்யந்தி (வேம்படி மகளிர்), மூன்றாமிடம் - எம்.நிவிற்நிசாந்தன் (புனித பத்திரிசியார்), நான்காமிடம் நுநித்தியா (யாழ்.இந்து மகளிர்), ஐந்தாமிடம் - வி.அன்ரன்றாயோ (புனித பத்திரிசியார்).

*தரம் 8 - 9* முதலாமிடம் - ந.வாணி (கொக்குவில் இந்து), இரண்டாமிடம் - வ.திவாகர் (யாழ். பரியோவான்), மூன்றாமிடம் - சு.ரொசாந்தன் (யாழ். இந்து), நான்காமிடம் - கி.சர்மிலன் (யாழ்.இந்து), ஐந்தாமிடம் - ஜோப் டனீசியஸ் (புனித சம்பத்திரிசியார்), அ.சமிக்கா (யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம்).

*தரம் 10 - 11* முதலாமிடம் - இ.ராமவித்தியா (வேம்படி மகளிர்), இரண்டாமிடம் - ப.சனாதனி (யாழ். இந்துமகளிர்), மூன்றாமிடம் - ஜே. ஜெயப்பிரியா (யாழ்.இந்து மகளிர்), நான்காமிடம் - ச.தனராஜ் (யாழ்.பரியோவான்), ஐந்தாமிடம் - ஜே.பிரதீபா (சுண்டிக்குளி மகளிர்), வி. கௌசல்யா (கொக்குவில் இந்து), கோ.நிசாந்தன் (யாழ்.இந்து)

தரம் 12-13 முதலாமிடம் - வி. தனுசன் (யாழ்.பரியோவான்), இரண்டாமிடம் - இ.கேதாரசர்மா (யாழ். இந்து), மூன்றாமிடம் - கி.கிரிவக்ஸன் (யாழ்.பரியோவான்), நான்காமிடம் கி.நிருத்திகா (வேம்படி மகளிர்), ஐந்தாமிடம் - லோ.விஜேந்திரன் (கொக்குவில் இந்து). (க-10)


## மாபெரும் 'சைக்கிள்' ஓட்டப் போட்டி - 2001

நவாலி வடக்கு சனசமூக நிலையத்தினரால் மேற்படி போட்டி திறந்த நிலையில் (OPEN TO ALL) நடத்தப்படவுள்ளது.

விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 08-08-2001 புதன்கிழமைக்கு முன்னதாகக் கீழ்க்காணும் இடங்களில் உடன் பதிவு செய்யவும்.

**மோகன் வீடியோ சென்ரர்**
மானிப்பாய் இலங்கைவங்கி முன்பாக

**அருணஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்**
347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பதிவுக் கட்டணம் 200/- மட்டுமே! - நிர்வாகம்.

## ரஷ்யாவில் உயர் கல்வி

சர்வதேச அங்கீகாரம் பெற்ற லுமும்பா போன்ற ரஷ்யப் பல்கலைக்கழகங்களில் கீழக்காணும் துறைகளுக்கு அனுமதி பெற்றுத்தரப்படும்.

1. மருத்துவம் (ஆங்கிலம்) 2. பொறியியல் (ஆங்கிலம்) 3. கணனியியல் (ஆங்கிலம்)

விரும்புபவர்கள் நேரிலோ, கடிதம் மூலமோ உடன் தொடர்புகொள்ளவும்.

Dr.க.சிவனடியான்,
நவாலி,
மானிப்பாய்.

(90511)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

இகம் 04 - 07 - 1914



பரம் 02 - 07 - 2001

### அமரர் ஆறுமுகம் மயில்வாகனம்

(ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்)

எங்கள் அன்புத் தெய்வம் எங்களை விட்டு நீங்கினாலும் அவர் நினைவுகள் ஒருபோதும் எங்களை விட்டு நீங்காது

இன்று (31-07-2001) செவ்வாய்க்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகளிலும் மற்றும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ம.ஜெயவரதராசா (அதிபர்)*
*"அமுத கரபி"*
*பாடசாலை வீதி.*
*வதிரி, கரவெட்டி.*

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(90627)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜூலை31

யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளி இடங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களில் இம்மாதம் 26ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

### யாழ்ப்பாணம்

(199653ஏ)

### கோப்பாய்

(181000ஏ) (181000பி) (181000சி)
(181000டி) (181000ஈ) (181000எவ்)
(186591ஏ) (186591பி) (187871ஏ)
(190340ஏ) (190340பி) (190357ஏ)
(190357பி) (191380ஏ) (191380பி)
(191380சி) (191419ஏ) (191419பி)
(191741ஏ) (191741பி) (191741சி)
(191741டி) (191742ஏ) (191742பி)
(191742சி) (192914ஏ) (192914பி)
(192981ஏ) (195616ஏ) (195616பி)
(195616சி) (195655ஏ) (195656பி)
(195792ஏ) (195792பி) (196281ஏ)
(196281பி) (196308ஏ) (196308பி)
(196308சி) (196308டி) (196308ஈ)
(196387ஏ) (196387பி) (196397ஏ)
(197711ஏ) (197712ஏ) (197712பி)
(197720ஏ) (197730ஏ) (197730பி)
(197736ஏ) (197736பி) (197780ஏ)
(197785ஏ) (197785பி) (197790ஏ)
(197829ஏ) (197829பி) (197829சி)
(197829டி) (197829ஈ) (97829எவ்)
(197837ஏ) (197837பி) (197850ஏ)
(197850பி) (197850சி) (198980ஏ)
(198980பி) (198991ஏ) (199108ஏ)
(199108பி) (199108சி) (199110ஏ)
(199110பி) (199142ஏ) (199143ஏ)
(199144ஏ) (199144பி) (199145ஏ)
(199146ஏ) (199146பி) (199147ஏ)
(199147பி) (199147சி) (199151ஏ)
(199152ஏ) (199152பி) (199157ஏ)
(199157பி) (199160ஏ) (199160பி)
(199160சி) (199160டி) (199160ஈ)
(199166ஏ) (199166பி) (199166சி)
(199166டி) (199166ஈ) (19166எவ்)
(199186ஏ) (199193ஏ) (199218ஏ)
(199222ஏ) (199222பி) (199223ஏ)
(199223பி) (199224ஏ) (199225ஏ)
(199229ஏ) (199229பி) (199233ஏ)
(199233பி) (199234ஏ) (199243ஏ)
(199249ஏ) (199249பி) (199249சி)
(200313ஏ) (200313பி) (200313சி)
(200314ஏ) (200314பி) (200320ஏ)
(200326ஏ) (200333ஏ) (200333பி)
(200333சி) (200333டி) (200333ஈ)
(200333எவ்) (200336ஏ) (200336பி)
(200336சி) (200340ஏ) (200345ஏ)
(200345பி) (200350ஏ) (200350பி)
(200365ஏ) (200365பி) (200372ஏ)
(200380ஏ) (200382ஏ) (200382பி)
(200382சி) (200382டி) (200382ஈ)
(200385ஏ) (200388ஏ) (200396ஏ)
(200396பி) (200396சி) (200415ஏ)
(200415பி) (200419ஏ) (200419பி)
(200420ஏ) (200420பி) (200420சி)
(200420டி) (200425ஏ) (200427ஏ)
(200435ஏ) (200437ஏ) (200442ஏ)
(200442பி) (200445ஏ) (201308ஏ)
(201308பி) (201323ஏ) (201324ஏ)
(201327ஏ) (201327பி) (201327சி)
(201332ஏ) (201333ஏ) (201334ஏ)
(201339ஏ) (201343ஏ) (201346ஏ)
(201347ஏ) (201348ஏ) (201349ஏ)
(201349பி) (201352ஏ) (201352பி)
(201357ஏ) (201358ஏ) (201399ஏ)
(201399பி) (201400ஏ) (201406ஏ)
(201406பி) (201406சி) (201415ஏ)
(203255ஏ) (203256ஏ) (203256பி)
(203257ஏ) (203266ஏ) (203266பி)
(203266சி) (203272ஏ) (203273ஏ)
(203273பி) (203276ஏ) (203276பி)
(203282ஏ) (203293ஏ) (203306ஏ)
(203306பி) (203306சி) (203338ஏ)

### நல்லூர்

(170788ஏ) (170861ஏ) (170874ஏ)
(171455ஏ) (187409ஏ) (187476ஏ)
(187476பி) (187476சி) (187611ஏ)
(187678ஏ) (187679ஏ) (187680ஏ)
(187717ஏ) (187820ஏ) (187827ஏ)
(187828ஏ) (187829ஏ) (187832ஏ)
(187855ஏ) (187856ஏ) (187857ஏ)
(187868ஏ) (187889ஏ) (187895ஏ)
(187897ஏ) (187898ஏ) (188026ஏ)
(188026பி) (188026சி) (188026டி)
(188060ஏ) (196380ஏ) (196380பி)
(199605ஏ) (199610ஏ) (199614ஏ)
(199615ஏ) (199617ஏ) (199619ஏ)
(199620ஏ) (199628ஏ) (199632ஏ)
(199633ஏ) (199634ஏ) (199635ஏ)
(199638ஏ) (199639ஏ) (199640ஏ)
(199662ஏ) (199673ஏ) (199753ஏ)
(200460ஏ) (200514ஏ) (200525ஏ)
(200556ஏ) (200559ஏ) (201155ஏ)
(201226ஏ) (201239ஏ) (201239பி)
(201239சி) (201239டி) (201335ஏ)
(201335பி) (201335சி) (201340ஏ)
(201340பி) (201340சி) (201340டி)
(201340ஈ) (201344ஏ) (201442ஏ)
(201443ஏ) (200535ஏ)

### தெல்லிப்பழை

(199208ஏ)

### உடுவில்

(191260ஏ) (191260பி) (191384ஏ)
(191384பி) (191489ஏ) (191489பி)
(196284ஏ) (196284பி) (196297ஏ)
(196297பி) (196317ஏ) (196317பி)
(196317சி) (196324ஏ) (196324பி)
(196324சி) (196369ஏ) (196369பி)
(196391ஏ) (196391பி) (196391சி)
(196391டி) (196391ஈ) (196392ஏ)
(196392பி) (196611ஏ) (201197ஏ)
(201197பி) (201197சி) (201198ஏ)
(201198பி) (201315ஏ) (201316ஏ)
(201318ஏ) (201319ஏ) (201320ஏ)
(201321ஏ) (201322ஏ) (201337ஏ)
~~(201337பி) (201354ஏ) (201361ஏ)~~
(201361பி) (201361சி) (201363ஏ)
(201366ஏ) (201402ஏ) (201402பி)
(201405ஏ) (201405பி) (201416ஏ)
(201416பி) (201420ஏ) (201420பி)
(201434ஏ) (201449ஏ) (201449பி)
(204501ஏ) (201505ஏ)

இம்மாதம் 27ஆம் திகதிவரை

### சங்கானை

(195904ஏ) (198923ஏ) (199330ஏ)
(199330பி) (199330சி) (199334ஏ)
(199334பி) (199457ஏ) (199485ஏ)
(199582ஏ) (199582பி)

### நல்லூர்

(185302ஏ) (196939ஏ) (196963ஏ)
(197004ஏ) (197004பி) (197004சி)
(197004டி) (197010ஏ) (199362ஏ)
(199415ஏ) (199415பி)

### சண்டிலிப்பாய்

(195809ஏ) (196907ஏ) (196907பி)
(196907சி) (196950ஏ) (196950பி)
(196950சி) (196950டி) (196987ஏ)
(198015ஏ) (199315ஏ) (199315பி)
(199344ஏ) (199345ஏ) (199345பி)
(199354ஏ) (199354பி) (199367ஏ)
(199532ஏ) (199535ஏ)

### தெல்லிப்பழை

(197855ஏ) (198926ஏ)

### உடுவில்

(194895ஏ) (195936ஏ) (198759ஏ)
(201623ஏ) (க-10)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகரத்தினம் இராசம்மா

இளவாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நாகரத்தினம் இராசம்மா (29-07-2001) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வி.நாகரத்தினம்(இராசா அண்ணை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற புஸ்பமலர் மற்றும் சிவலிங்கம் (கனடா), தேவிகாமலர்(கொழும்பு), கிருபாலிங்கம் (கனடா), கிருபாமலர் (கனடா), பத்மாமலர்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், வைரவநாதன் (கருகம்பனை), ஜெகஜெனனி(கனடா), காசிநாதர்(கொழும்பு), பத்மராணி(கனடா), ஜெனார்த்தன குமாரன்(கனடா), குகனேசன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், **Dr.**செ.சபாரட்ணத்தின் (கனடா) அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29-07-2001 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெற்றன என்பதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

*இளவாலை வடக்கு.*

**N.Sivalingam**
**134, Old Sheppard Ave,**
**Willowdale, Ontalrio,**
**$M_2 J_3 L_9$ Canada.**

தகவல்:-
வ.வைரவநாதன்
*(மருமகன்)*

(90624)

## வாடகை அடிப்படையில் அவசரமாக நான்கு 'ஜெட்' விமானங்களை பாகிஸ்தானிடம் பெற முயற்சி

### இராணுவ உயர் அதிகாரி விரைவில் அங்கு செல்வார்

கொழும்பு, ஜூலை 31
இலங்கை விமானப்படையினரின் பாவனைக்காக பாகிஸ்தானில் இருந்து உடனடியாக நான்கு மிக் – 27ரக தாக்குதல் ஜெட் விமானங்களை வாடகை அடிப்படையில் பெறுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக அறிய வருகிறது.

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது, தாக்குதல் விமானங்கள் அழிக்கப்பட்டதால அவசர தேவைக்காக இந்த நடவடிக்கையை அரசு எடுத்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதே வேளை —

கேள்வி அறிவித்தல் (ரெண்டர்) மூலம் அறிவிப்புச்செய்து விமானங்களைக் கொள்வனவு செய்ய காலதாமதமாகும் என்பதால், தற்போதைய அவசர நிலையைச் சமாளிப்பதற்கு வாடகை அடிப்படையில் விமானங்களைப் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்புத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஏற்பாடுகளைக் கவனிக்க கூட்டு இராணுவ நடவடிக்கை தலைமையகத்தின் உயர் அதிகாரி ஒருவர் விரைவில் பாகிஸ்தானுக்குச் செல்லவுள்ளார் என்றும் தெரிய வந்தது. (க-7)

## வன்னியிலும் பாதீனியம் ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரம்

வன்னிப் பகுதியிலும் பாதீனியம் களைகள் வேகமாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒட்டுசுட்டான், நெடுங்கேணி ஆகிய பகுதிகளில் மிக அதிகளவில் பாதீனியம் காணப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் மூலம் தெரியவருகிறது.

இந்தக் களைகளை அழிப்பதற்கான நடவடிக்கைகளை அங்குள்ள விவசாய நிறுவனங்கள் எடுத்து வருவதுடன், ஏனைய பகுதிகளுக்குப் பரவாமல் தடுப்பதற்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. [க-72]

### ஊர்காவற்றுறைப் பிரதேச சபை

## அபிவிருத்திப் பணிகளுக்கு 9 லட்சம் ரூபா ஒதுக்கீடு

ஊர்காவற்றுறை, ஜூலை 31
ஊர்காவற்றுறைப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் இந்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு — செலவுத்திட்ட நிதியில் இருந்து பின்தங்கிய பிரதேசங்களுக்குரிய குழாய் நீர் விநியோகம், புனரமைப்பு, பாடசாலைகள் புனரமைப்பு, தென்னங்கன்று விநியோகம் என்பவற்றுக்கென எட்டு லட்சத்து 90 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் ந. மதனராஜா தெரிவித்தார்.

நிதி ஒதுக்கீடுகளும் அவற்றுக்கான வேலைத்திட்டங்களின் விவரமும் வருமாறு:-

★ மெலிஞ்சிமுனை குழாய் நீர் விநியோகம் புனரமைப்பு (1 லட்சம்).

★ தம்பாட்டி குழாய் நீர் விநியோகம் புனரமைப்பு (1 லட்சம்).

★ எழுவைதீவு குழாய் நீர் விநியோகம் புனரமைப்பு (1 லட்சம்).

★ தென்னங்கன்று கொள்வனவு செய்து விநியோகித்தல்(90 ஆயிரம்).

★ ஊர்காவற்றுறைப் பகுதியைச் சேர்ந்த 18 பாடசாலைகளுக்கு கற்பித்தல் உபகரணங்கள் வழங்குதல் (1 லட்சம்).

★ நாரந்தனை றோ.க.த.கலவன் பாடசாலை அதிபர் அலுவலகம் புனரமைப்பு (1½ லட்சம்).

★ கரம்பன் சிறிய புஷ்ப மகளிர் வித்தியாலயம் சுணணித்துறை அமைத்தல் (50 ஆயிரம்).

★ சின்னமடு றோ. க. த. கலவன் பாடசாலை புனரமைப்பு ( 1 லட்சம்).

★ கரம்பொன் சண்முகநாதன் வித்தியாலயத்தில் கணனித்துறை அமைத்தல் (50 ஆயிரம்).

மேற்படி வேலைத்திட்டங்களை இந்த வருடத்துக்குள் நிறைவேற்றி முடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மதனராஜா தெரிவித்தார். (க-7-16)

## குருநகர் புதிய பங்குத்தந்தை

குருநகர், ஜூலை 31
குருநகரின் புதிய பங்குத் தந்தையாக அருட்திரு. அ. ஜெயசேகரம் அடிகள் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 6 30 மணிக்குக் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலியை நிறைவேற்றித் தமது இறைபணியை ஆரம்பித்துள்ளார்.

1971 ஆம் ஆண்டு குருப்பட்டம் பெற்ற அ. ஜெயசேகரம் அடிகள் கடந்த 18 வருடங்களுக்கு மேலாக ஐரோப்பாவில் இறைபணியாற்றிக் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னரே யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

குருநகர்ப் பங்கில் பங்குத் தந்தையாக முன்னர் பணி புரிந்த வண. பிதா பி. எல். பொணிபஸ் அடிகள் இளவாலைப் பங்குக்கு இறை பணிபுரிய இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (க-51)

## சுவாமி தந்திரதேவா இன்று பங்குபற்றும் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 31
அமெரிக்க சுவாமிஜி ஸ்ரீமத் தந்திரதேவ மகராஜ் இன்று யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் பிரார்த்தனை நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ளார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இன்று காலை 8.30 மணியளவில் கல்லூரி அதிபர் கு. சண்முகநாதன் தலைமையில் சுவாமிஜிக்கு வரவேற்பு அளிக்கப்படும். தொடர்ந்து அங்கு நடைபெறும் பிரார்த்தனையிலும் சுவாமிஜி கலந்து கொள்வார்.

முற்பகல் 11 மணிக்கு சுவாமிஜிக்கு வட்டு. மத்திய கல்லூரியில் வரவேற்பு அளிக்கப்படும். அதற்கு முன்னர் சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் ஆலயத்திலிருந்து மேற்படி கல்லூரிவரை சுவாமிஜி ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார்.

பிற்பகல் 12-30 மணிக்கு பிளவத்தை அ. மி. த. க பாடசாலையில் சுவாமிஜிக்கு வரவேற்பு அளிக்கப்படும். அதற்கு முன்னர் வட்டு வீரபத்திரசிவன் ஆலயத்தில் இருந்து மேற்படி பாடசாலை வரை சுவாமிஜி ஊர்வலமாக அழைத்து வரப்படுவார்.

பிற்பகல் 3.30 மணிக்கு நவாலி மகேஸ்வர சிறுவர் இல்லத்துக்குவிஜயம் செய்யும் சுவாமிஜி அங்கு சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

மாலை 5 மணிக்கு சங்கானை மாவடி ஞான வைரவர் ஆலயத்தில் சுவாமிஜிக்கு வரவேற்பு அளிக்கப்படும் இந்த நிகழ்வில் சுவாமிஜி சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன், இ.சச்சிதானந்தம் ஆகியோர் இதில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (க-7)

## கைதடி மாணவர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 31
கைதடி முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று தற்பொழுது இடம்பெயர்ந்து வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் ஜி. சி. ஈ. (சாதாரண தர) மாணவர்கள் அனைவரையும் உடனடியாகப் பாடசாலைக்கு வருகை தந்து பரீட்சை விண்ணப்பப் படிவத்தில்கையொப்பமிடுமாறு அதிபர் வ. ஆறுமுகநாதன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் எதிர்வரும் 4ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்கள் தமது பரீட்சை அனுமதி அட்டைகளை வந்து பெற்றுக் கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (க-10)

## 3 பாடசாலைகள் புனரமைப்புக்கு 30 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜூலை 31
வலிகாமம் வலயத்தில் இயங்கும் மூன்று பாடசாலைகளுக்கு 30 லட்ச ரூபாவை புனரமைப்புப் பணிகளுக்காக வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு ஒதுக்கியுள்ளது.

கட்டட புனரமைப்புக்காக மருதனார்மடம் இராமநாதன் கல்லூரிக்கு 10 லட்சம் ரூபாவும், உடுவில் மகளிர் கல்லூரிக்கு 10 லட்சம் ரூபாவும், ஸ்கந்தவரோதய கல்லூரிக்கு தளபாடம் மற்றும் புதிய கட்டட நிர்மாணத்துக்காக 10 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது

உரிய பாடசாலைகள் மேற்படி நிதியை பெற்றதும் புனரமைப்பு மற்றும் நிர்மாணப் பணிகளை உடனடியாக ஆரம்பித்து இந்த வருட இறுதிக்குள் நிறைவு செய்ய வேண்டும் என்று யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [க-6-4]

## 'யுனிசெவ்' உதவியுடன் மூலவள நிலையம்

யாழ்ப்பாணம், ஜூலை 31
யாழ். மாவட்டத்தில் ஆரம்ப பிள்ளைப் பருவமேம்பாட்டுக்கென 'யுனிசெவ்' நிறுவனமும் உள்ளூராட்சித் திணைக்களமும் இணைந்து முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மூலவள நிலையம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. (க-10)

## எம்மதமும் சம்மதம் என்ற உயர்ந்த தத்துவத்தை தவறாக விளங்கி மதம் மாறுவோர் துரோகிகள்

### பேராசிரியர் கைலாசநாதக் குருக்களின் நினைவுதின நிகழ்வில் சுவாமி தந்திரதேவா

யாழ்ப்பாணம், ஜூலை 31
'எம்மதமும் சம்மதம்' என்ற இந்து சமய ஞானிகளின்உயர்ந்த தத்துவத்தைத் தவறாக விளங்கி — புரிந்து கொண்டு இந்துசமயத்தில் இருந்து மதம் மாறுபவர்கள சமயத் துரோகிகள்!

— இவ்வாறு கூறினார் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருக்கும் ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவ மகராஜ்.

'நியந்த்ரீயின்' ஏற்பாட்டில் கடந்தஞாயிறு நல்லூர் சிவன் கோயிலில் நடைபெற்ற பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்களின் நினைவு தின நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின், சுவாமி தந்திரதேவ மகராஜ் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

இந்து தர்மங்கள் அனைத்துக்கும் அடிப்படையாக அமைவது சமஸ்கிருத மொழியே ஆகும். இந்து மொழியாக விளங்குகின்ற சமஸ்கிருதத்தை விடுத்து வேதமந்திரங்களைத் தமிழ் மொழியில் ஓத வேண்டும் என்று கூறுவது மிகவும் தவறான கருத்தாகும்.

அதுமட்டுமன்றி உலகிலுள்ள சகல இந்து நெறிகளையும் இணைக்கின்ற இணைப்பு மொழியாக இருப்பதும் சமஸ்கிருதமே. இந்து சமயத்தின் மூலநாடியாக விளங்குகின்ற வேத ஆகமங்களில் இந்து சமய நெறிகள் அனைத்தும் சிறப்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

### ஆகமசாஸ்திரங்களில்..

ஆகம சாஸ்திரங்கள் ஒரு கோயில் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என்றும், கர்ப்பக்கிரகத்தில் பூசைகள் எவ்வாறு இடம்பெற வேண்டும் எனவும் சட்டதிட்டங்களை வகுத்துள்ளன.

எனவே அந்த ஆகமப் பாரம்பரியத்தைச் சீர்குலைக்காது அவற்றில் கூறப்பட்டுளவற்றை ஒழுங்காகக் கடைப்பிடிக்க வேண்டும்.

''எம்மதமும் சம்மதம்'' என்ற உயர்ந்த தத்துவக் கோட்பாடு இந்துமதத்தைச் சேர்ந்த ஞானிகளினாலேயே கூறப்பட்டுள்ளது.

எமது சமயத்தில் இருப்பவர்கள் வேற்றுச் சமயங்களிலுள்ள நல்ல கருத்துக்களையும் ஏற்றுக் கொண்டு தங்களை வளம்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே அந்த தத்துவத்தை எமது ஞானிகள் கூறினார்கள்.

ஆனால் அதனைத் தவறாக விளங்கிக் கொள்ளும் எமது சமயத்தவர்கள் சிலர் இந்தத் தத்துவத்தை கூறிக் கொண்டு பிற சமயங்களுக்கு மாறிவருகின்றனர்.

இந்து சமயிகள் மதம் மாறுவதற்கு அவர்களிடம் உள்ள வறுமை நிலையே காரணம் என்று சிலர் கூறிக்கொள்கின்றனர். இந்தக் கருத்தை எவருமே ஏற்றுக்கொள்ள முடியாது — என்றார்.

யாழ்ப்பாணம் வந்து இவ்வாறான நிகழ்வுகளில் கலந்து கொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

### பேராசிரியர் தலைமையுரை

இந்த நிகழ்வுக்கு தலைமை வகித்த பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் தமது தலைமையுரையில் —

பேராசிரியர் க. கைலாசநாதக்குருக்களும் அவருடைய பரம்பரையினரும் எமது நாட்டிலே சைவக்கிரியைகள் சிறப்பாக நடைபெறுவதற்கு வழிவகுத்தனர்.

சிறந்த ஆகமக்கிரியை பாரம்பரியத்தை உருவாக்கி வைத்த குருக்கள், ஈழத்தில் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான முன்னேஸ்வரத்திலே கிரியைகள் மற்றும் நைமித்திய பூசைகளைச் சிறந்த முறையில் செய்து வந்தவர்.

தான் கற்ற கல்வியை பலரும் பெறத்தக்க வகையில் கல்விப் போதனைகள் செய்ததோடு இந்துசமய கிரியைகள் தொடர்பான பல நூல்களைத் தமிழ் மொழியிலும் எழுதி வெளியிட்டவர்.

பல்கலைக்கழக மட்டத்தில் சமஸ்கிருத மொழிக்கு முக்கியத்துவம் அளித்து அந்த மொழியை மாணவர்களுக்கு இலகுவான முறையில் கற்பித்தவர்.

சிவாகமங்கள், இதிகாசங்கள், புராணங்கள் என்பவற்றிலுள்ள இந்துசமய விழுமியங்களை உலகுக்கு எடுத்து விளக்குவதற்காக பல நூல்களையும் வெளியிட்டவர்.

சிவாகம முறைகளை விளக்க முனைந்து வெற்றி கண்டவர்களில் தனக்கென ஒரு தனியிடம் பிடித்துக் கொண்டவர் பேராசான் கைலாசநாதக் குருக்கள் என்றால் அது மிகையாகாது — என்றார். (க-4)

## வாழ்த்துகின்றோம்!

யாழ்.செங்குந்த இந்துக் கல்லூரியில்
இன்று நடைபெறும் பரிசுத்தின நிகழ்வும் 'சுடரொளி' மலர் வெளியீட்டு விழாவும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.
மிக நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் கல்லூரி மலரை அழகுற அச்சுருவாக்குவதில் உழைத்த கல்லூரிச் சமூகத்தினருக்கு எங்கள் பாராட்டுகள் உரித்தாகட்டும்!

பழைய மாணவர்கள்
(1989 - 1990 உயர்தரம்)

(C-17637)




ஸ்ரீமத் தந்திரதேவா மகராஜ்
அவர்களின்
வதிரி பூவற்கரைப் பிள்ளையார்
ஆலய விஜயம்
*இன்று (31.07.2001) செவ்வாய்க்கிழமை*
*பி.ப. 4.00 மணி*

அமெரிக்க நாட்டின் இந்து மதத்துறவி ஸ்ரீமத் தந்திரதேவா மகராஜ் சுவாமியைத் தரிசித்தும், சொற்பொழிவைக் கேட்டும், ஆசீர்வாதம் பெற்றுப் பேரின்பப் பெருவாழ்வு பெற வடமராட்சி மக்களை அன்புடன் அழைக்கின்றோம்.

வதிரி பூவற்கரைப் பிள்ளையார்
*ஆலய பரிபாலன சபை.*

(90653)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

யா/கைதடி சேதுகாவலர் வித்தியாலய ஓய்வுபெற்ற அதிபர்
**அமரர் இராமலிங்கம் வேலாயுதர்**
(முன்னாள் தலைவர், நாவற்குழி, கைதடி, கிராம சபை)

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

"மக்கள் மேலுயரச் சேவை செய்தவர்
எங்கள் வேலாயுதர்"

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

யா/கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்,
கைதடி.

(90656)

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## GENERAL CONVOCATION 2001-10-06

The General Convocation of the University of Jaffna will be held on 2001.10.06 for the conferment of Diplomas/Degrees and Post-Graduate Degrees.

Those who have passed the following Examinations are kindly requested to supplicate on or before 2001.08.31.

1. Doctor of Philosophy.
2. Master of Philosophy.
3. Bachelor of Medicine and Bachelor of Surgery.
4. Bachelor of Commerce.
5. Bachelor of Business Administration.
6. Bachelor of Science (Special/General)
7. Bachelor of Arts (Special/General)
8. Diploma in Music/Bharathanatyam
9. Bachelor of Fine Arts (Music/Dance)
10. Bachelor of Siddha Medicine & Surgery
11. Bachelor of Science in Agriculture
12. Diploma in Physical Education
13. Diploma in Fisheries
14. Diploma in Science
15. Postgraduate Diploma in Education
16. Postgraduate Diploma in Public Administration.

Application forms and other details can be obtained from the Assistant Registrar/Examinations & Admissions, University of Jaffna by sending a self addressed stamped envelope 23X10c.m. in size or by calling over personally at the Examinations Branch during normal working hours. Late supplication will not be entertained.

The supplication forms may also be obtained from:-

1. *Vavuniya Campus,*
   *Station Road,*
   *Vavuniya.*
2. *Colombo Stores/Office,*
   *EG,4, Central Road,*
   *Colombo 12.*

**Registrar**

(C/17639)

## சனசமூகநிலைய தலைவர்களுக்கு அவசர அழைப்பு

வலி.கிழக்குப்பிரதேச சபையின் கோப்பாய் மற்றும் உரும்பிராய் உப அலுவலகங்களுக்கு உட்பட சன சமூக நிலையங்களின் தலைவர்களை நிதிவழங்கல் சம்பந்தமாக சகல பதிவேடுகளுடனும் குறிப்பிட்ட உப அலுவலகங்களுக்கு காலை 10 மணிக்கு வருகை தருமாறு சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் கேட்டுள்ளார்.

இன்று செவ்வாய்க்கிழமை கோப்பாய் உப அலுவலகத்திற்கு உட்பட்ட சனசமூக நிலையங்களையும்.

நாளை புதன்கிழமை உரும்பிராய் உப அலுவலகத்துக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களையும் அந்தந்த உப அலுவலகங்களுக்கு வருகைதருமாறு அவர் தெரிவித்துள்ளார். (க - 10)

## விதை உருளைக் கிழங்கு எடுத்துவருவதற்கு தனியாருக்கு அனுமதி

யாழ்ப்பாணம் ஜூலை 31

காலபோக செய்கைக்கென கடந்த ஆண்டைப்போன்று இந்த ஆண்டும் தனியாரினால் விதை உருளைக்கிழங்கு எடுத்து வருவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ் செயலகத்தில நடைபெற்ற மாவட்ட விவசாயக் குழுவின் கூட்டத்திலேயே இந்த அனுமதி வழங்கப்பட்டது. (க-10)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

பட்டமளிப்பு விழா அங்கிகளை உலர்சலவை செய்தல்
(Dry - Cleaning)

யாழ்.பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா அங்கி (Cloak) (சுமார் 700 வரை) உலர்சலவை செய்ய வேண்டியுள்ளதால் சலவையக உரிமையாளர்கள் தங்களது விலைக்கூற்றை 2001.08.15ஆம் திகதிக்கு முன்னர் *'உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்.பல்கலைக் கழகம்'* என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். இது தொடர்பான மேலதிக விவரங்களை உதவிப்பதிவாளர் (கல்விக்கிளை), அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.
2001.07.30

(C-17635)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

பட்டமளிப்பு விழா - 2001
வீடியோ, புகைப்படம் பிடித்தல

யாழ்.பல்கலைக்கழகத்தின் 20ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 2001.10.06ஆம் திகதி நடைபெறவுள்ளது. இவ் விழா நிகழ்வை வீடியோப் படம் எடுப்பதுடன் 1000 புகைப்படங்கள் வரை (போஸ்ட் காட் அளவுள்ள கலர்ப் புகைப்படம்) எடுக்க வேண்டியுள்ளதால் தகுதிவாய்ந்த வீடியோ, புகைப்படப் பிடிப்பாளர்கள் தங்களது விலைக்கூற்றை 2001.08.15ஆம் திகதிக்கு முன்னர் *உதவிப்பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்* என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(C-17634)

## உதவிக்கு ஒருவர் தேவை

வயோதிபர் ஒருவரைக் கவனித்துப் பராமரிக்க ஒரு பெண் பிள்ளை தேவை.
வதிவிடமும் உணவும், வேதனமும் வழங்கப்படும்.

தொடர்பு:-
பொ.சிவசுப்பிரமணியம்
இல.64, விபுலானந்தர் வீதி,
அரியாலை.

(90638)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும்
இராமநாதன் நுண்கலைப்பீட நடனத்துறைத் தலைவருமான
கலாநிதி
**சபா.ஜெயராசா**
அவர்கள்

பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு நாம் பேருவகையடைகின்றோம்.
தனிப்பட்ட முறையில் எனது வழிகாட்டியாகவும் நல்லாசானாகவும் விளங்கி வருகின்ற இவர் பல்லாண்டு காலம் நீடூழி வாழ இறையருளை வேண்டி அவரைப்
*பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

*சீ.பி.எம். ஒழுங்கை,*
*நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.*

திரு.செ.உலகநாதன்
குடும்பத்தினர்.

(90657)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
இலங்கை

## அறிவித்தல்

**கலைப்பீட வருடாந்தப் பரீட்சைகள்**

கலைப்பீடப் பரீட்சைகள்
பின்வரும் திகதிகளில் ஆரம்பமாக உள்ளன:

| | |
|---|---|
| 1) முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை -2000 | -13.08.2001 |
| 2) பொதுக்கலை/சிறப்புக்கலை. பகுதி 1 மீள்பரீட்சை | - 20.08.2001 |
| 3) இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2000 | -27.08.2001 |
| 4) இரண்டாம் மொழி ஆங்கிலம் - Level-i மீள் பரீட்சை | - 29.08.2001 |
| 5) இரண்டாம் மொழி ஆங்கிலம் - Level-ii மீள் பரீட்சை | - 30.08.2001 |
| 6) இரண்டாம் மொழி ஆங்கிலம் - Level-iii மீள் பரீட்சை | - 31.08.2001 |
| 7) முதலாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை (விசேட பரீட்சை) | - 03.09.2001 |
| 8) பொதுக்கலை/சிறப்புக்கலைப் பரீட்சை பகுதி ii - 2000 | - 10.09.2001 |
| 9) இரண்டாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை (விசேட பரீட்சை) | - 17.09.2001 |
| 10) சிறப்புக்கலை, பகுதி iii | - 24.09.2001 |

- பதிவாளர்.

(C/17640)

# மரண அறிவித்தல்கள்

## முத்தையா செல்லையா

புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவில் வசித்து வந்தவருமாகிய முத்தையா செல்லையா 25-07-2001 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - இராசம்மா தம்பதிகளின் செல்வப்புதல்வனும், காலஞ்சென்ற குழந்தைவேலு - கனகம்மா ஆகி யோரின் அருமை மருமகனும், வடிவாம்பிகையின் அன்புக் கணவரும், பத்மகுமார், கமலகுமார், செல்வகுமார், சாந்தகுமார், ஜெயந்தினி ஆகியோ ரின் அன்புத் தந்தையும், முத்தம்மா, காலஞ்சென்ற குணராசா மற்றும் வீரலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், முத்துமாரி, சிவானந்த லிங்கம், குமாரவேலு, சீவரெட்ணம், உமாதேவி, சிவராசா, சிவனேஸ் வரி, கேமலதா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(31-07-2001) செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*33, செல்லர் வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:-
கு.சிவானந்தலிங்கம்.
*(மைத்துனன்)*

(90651)

## திருமதி பொன்னுத்துரை இரத்தினம்

கந்தர் மடத்தைப் பிறப்பிடமாகவும், இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை இரத்தினம் நேற்று (30-07-2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், அன்னலிங்கம் (பிரான்ஸ்), திருலிங்கம் (ஓவியர்), தவமணிதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், தங்கராணி (பிரான்ஸ்), சாவித்திரி, இராஜரட்ணம் (பேபி போட்டோ உரிமையாளர்), C.N.கந்தசாமி, புவனேஸ்வரி (வவுனியா) ஆகியோரின் மாமியாரும், ரமேஸ் (ஜேர்மனி), கேதீஸ் (பிரான்ஸ்), அமுதா(பிரான்ஸ்), கெனடி ராஜ் (Rain bow mini lap - வவுனியா), குபேந்திரராஜ் (சுவிஸ்), ராம்ணராஜ் (லண்டன்), மோகனா, ஜனார்த்தனன் (இணுவில் இந்துக் கல்லூரி மாணவன்), சர்மிளா (ஜேர்மனி), ஜெயக்குமார் (பிரான்ஸ்), சிவந்தனா (வவுனியா), றெணாதா (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும், ரிசிக்கா (ஜேர்மனி), பிரவீண்ராஜ் (வவுனியா) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (31-07-2001) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இருபாலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*டச்சு றோட்,*
*இருபாலை.*

தகவல்:-
N.இராஜரட்ணம்
*(மருமகன்)*
*(Baby Photo உரிமையாளர்)*

(90649)

## 'இலங்கையில் தமிழனுக்கு சுதந்திரம் இல்லை!'

# சிறையில் 'நீ புலியா... புலியா?' எனக்கேட்டு சிங்களக் கைதிகள் எங்களைத் தாக்கினர்!

## தாயகம் திரும்பிய தமிழக மீனவர்கள் அழுதழுது பேட்டி

திருவனந்தபுரம்,ஜூலை31

நாங்கள் அநுராதபுரம் சிறைச் சாலையில் அடைக்கப்பட்டிருந்த போது "நீ புலியா... நீ புலியா...?" என்று கேட்டு சிங்களக் கைதிகள் தங்களைத் தாக்கினர் என்று, இலங்கையில் இருந்து தாயகம் திரும்பிய தமிழக மீனவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

கொழும்பிலிருந்து கேரள மாநிலம் திருவனந்தபுரம் விமானநிலையத்துக்கு அழைத்துவரப்பட்ட அந்த மனவர்கள் செய்தியாளர்களிடம் -

"இலங்கையில் தமிழர்களுக்கு சுதந்திரம் இல்லை. தமிழன்னு சொன்னாலே அடிக்கிறானுக... உதைக்கிறானுக... கடிக்கிறானுக..." என்று ஆத்திரம் மேலிடத் தெரிவித்தனர்.

சிறையில் எங்களுக்கு உணவு கொடுக்காமல் உதைத்து சித்திரவதை செய்தனர் என்றும் அவர்கள் அழுதவாறு கூறினர்.

இராமேஸ்வரத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்றபோது இலங்கை கடற்படையினரால், 24 மீனவர்களுடன் 6 விசைப்படகுகளும் பிடித்துச் செல்லப்பட்டன. கடந்த ஜூன் மாதம் பிடித்துச் செல்லப்பட்ட இம்மீனவர்களை விடுவிக்கக்கோரி சகமீனவர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தினர். தற்போது மீன்பிடிக்கச் செல்லாமல் வேலைநிறுத்தமும் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் இலங்கையில் உள்ள மனித உரிமைகளுக்கும் கௌரவத்திற்குமான மன்றத்தைச் சேர்ந்த சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதத்தின் முயற்சியால் கடந்த சில நாள்களுக்கு முன் தமிழகத்தைச் சேர்ந்த 22 மீனவர்கள் இலங்கை நதிமன்றத்தில் விடுவிக்கப்பட்டு, கடற்படை மூலமாக இந்திய கடலோரக் காவற்படையிடம் ஒப் படைக்கப்பட்டு நாடு திரும்பினர்.

வெள்ளிக்கிழமை இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மேலும் 17 மீனவர்கள் இலங்கை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டு விமானத்தின் மூலம் திருவனந்தபுரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்ட மீனவர்கள் தற்போது இலங்கைச் சிறையில் உள்ள 27 மீனவர்களையும் தங்களது படகுகளையும் விடுவிக்கவேண்டும் என்று மாவட்ட கலெக்டரிடம் கோரிக்கை விடுத்தனர். இது குறித்து விரைவில் நடவடிக்கை மேற்கொள்வதாக அவர் அந்த மீனவர்களிடம் உறுதியளித்தார்.

அந்த மீனவர்கள் செய்தியாளரிடம் மேலும் கூறியதாவது:-

இராமேஸ்வரத்தில் இருந்து மீன் பிடிக்கச்சென்ற நாங்கள் இந்தியக் கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டு இருந்தோம். அங்கு ரோந்து வந்த இலங்கைக் கடற்படையின் துப்பாக்கியால் சுட்டவண்ணம் வந்தனர். துப்பாக்கிக் குண்டுகள் எங்கள் படகின் மீது பாயும் எனப்பயந்த நாங்கள் எங்கள் படகில் விளக்குகளைப் போட்டோம் அப்போது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் எங்கள் படகுக்கு வந்து நாங்கள் பிடித்து வைத்திருந்த மீன்களையும் மீன்பிடிப்பொருள்களையும், வலைகளையும் பறித்துக் கொண்டு எங்கள் கண்களைக் கட்டி இழுத்துச் சென்றனர்.

### கெஞ்சிக்கேட்டும் விடுவிக்கவில்லை

பின்னர் எங்களை மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர். நீதிபதியிடம் எங்களைத் திருப்பி அனுப்புமாறு கெஞ்சியும் அவர் எங்களை விடுவிக்காமல் 14 நாள் சிறைவைக்க உத்தரவிட்டார். மீண்டும் 14 நாள் கழித்து நீதிமன்றத்திற்கு நாங்கள் சென்றபோது மன்னார் பொலீஸார் வராததால் மீண்டும் 14 நாள்கள் சிறையில் அடைக்கக் கூறினார். இதையடுத்து எங்களை சிங்களக் கைதிகள் வைக்கப்பட்டிருந்த அநுராதபுரச்சிறையில் அடைத்தனர்.

அங்கு கூட்டமாக இருந்த சிங்களக் கைதிகள் நாங்கள் தமிழர்கள் எனத் தெரிந்துகொண்டு சிங்கள மொழியில் திட்டியவாறு எங்களைத் தாக்கினர். இது குறித்து சிறை அதிகாரியிடம் முறைப்பாடு கூறியும் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. கடந்த 3 நாள்களுக்கு முன்னர்தான் எங்களை அந்த சிறையிலிருந்து மாற்றி சிங்களக் கைதிகளின் தாக்குதலிலிருந்து மீட்டனர்.

அதன்பின் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தபோதுதான் இலங்கை விமான நிலையம் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டது. சிறையில் இருந்த போதும் தூதரகத்தில் இருந்தபோதும் எங்களுக்கு நல்ல உணவே கிடைக்கவில்லை. நாற்றம் எடுத்த உணவையே சிறையில் எங்களுக்குக் கொடுத்தனர் - என்று அவர்கள் கூறினர். (க)

## 'றான்' அமைப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மானிக்கப்பட்டுள்ளதாகவும் - சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1995 ஆம் ஆண்டு இடம் பெயர்வினால் பாதிக்கப்பட்ட அறுநூறுக்கும் மேற்பட்ட வர்த்தகர்களின் பொலீஸ் அறிக்கைகளுடன் வடக்கு மீளகுடியேற்ற புனரமைப்பு அதிகாரசபைத் தலைவருக்கு 1998, 1999 காலப்பகுதிகளில் எமது சம்மேளனம் ஊடாக அனுப்பப்பட்ட நஷ்டஈட்டுக்கான விண்ணப்பங்கள் அச்சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அவை தொடர்பாக நஷ்டஈடு வழங்குவதற்கான திட்டம் தங்களிடம் தற்போது இல்லை எனவும், ஆனால் புனர்நிர்மாணத்திற்கான கடன் திட்டமொன்று தங்களின் சபையால் தொடக்கப்பட்டுள்ளதாகவும் 1999 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி வடக்கின் மீள்குடியேற்ற, புனரமைப்பு அதிகார சபை பொது முகாமையாளரால் எமக்கு எழுதப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதன்பின் அச்சபைத் தலைவருக்கு எமது சம்மேளனம் பல நினைவூட்டல் கடிதங்கள் எழுதியும் அதற்கு இதுவரை எதுவித முன்னேற்றமும் காணப்படவில்லை.

கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் கே.என்.டக்ளஸ் தேவானந்தா யாழ். நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த போது எமது வர்த்தகர்களுக்கு உதவும்படி ஒரு கடிதம் அனுப்பி அதன் பின் அவர் வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு, வடக்கு, கிழக்கு தமிழ் விவகார இந்து கலாசார அமைச்சராகப் பதவியேற்றபின் கடந்த ஏப்ரலில் ஒரு விரிவான கடிதமும் நாம் அனுப்பியும் இதுவரை இவ்விடயம் தொடர்பாக எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற நிர்வாக சபைக் கூட்டத்தில் இவ்விடயம் குறித்து ஆராயப்பட்டு ஒகஸ்ட் மாதத்தில் யாழ்குடாநாட்டில் உள்ள வர்த்தகர் சங்கங்கள் யாவற்றிற்கும் உட்பட்ட பிரதேசங்களில் உள்ள சகல கடைகளையும் பூட்டி ஒரு நாள் அடையாளப் பகிஷ்கரிப்பும் ஆர்ப்பாட்டப் பேரணியும் நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டது.

எதிர்வரும் 5 ஆம் திகதி சகல வர்த்தகர் சங்கங்களும் மீளக்கூடி இதற்கான ஒரு தினத்தை நிர்ணயிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது - என்றுள்ளது. (உ-3)


### யா/செங்குந்த இந்துக் கல்லூரி
### பரிசுத்தின விழாவும் சுடரொளி மலர் வெளியீடும்

காலம் : இன்று (31.07.2001) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00மணி
இடம் : கல்லூரியின் திறந்த வெளியரங்கு
தலைவர் : திருமதி சி.விஸ்வலிங்கம் (அதிபர்)

முதன்மை விருந்தினர்
பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

பரிசில் வழங்குபவர்
திருமதி இராஜலட்சுமி பாலசுந்தரம்பிள்ளை
(ஆசிரியர், யா/மத்திய கல்லூரி)

சிறப்பு விருந்தினர்
திரு.நா.வரதராசா (பிரதிக்கல்விப்பணிப்பாளர், யாழ்.கல்வி வலயம்)
திரு.சி.சிவசரவணபவன் (சிற்பி, முன்னாள் அதிபர்)
திரு.சின்னலாந்தேசு பத்மநாதன்
(உரிமையாளர், 'லாவண்யா' நகை மாளிகை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(90634) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.



ராஜா யாழ்ப்பாணம்

இன்று முதல் குதூகல ஆரம்பம்
இளையதளபதி விஜய், தேவயாணி, சூர்யா, வடிவேலு மற்றும் பலர் நடிப்பில

ப்ரண்ட்ஸ்

தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(பு.நே.)

(C/17443)




## நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை31

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று அதிகாலை 5மணிக்கு, திருமுறை வீதி பஜனையும் தொடர்ந்து குருமூர்த்தி ஆலயத்தில் காலை 8 மணிக்கு விசேட பூசை, தீபாராதனை, வழிபாடுகளையடுத்து 'கந்த புராணம்' புராணபடனமும் இடம்பெறும்.

★ ★ ★

நல்லூர்க்கந்தன் ஆலய உற்சவத்தையொட்டி இளங்கலைஞர் மன்றத்தால் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்றுவரும் தெய்வீக இசையரங்கில் இன்று மாலை 6 மணிக்கு ஸ்யாலச்சந்திரனின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும். (ஐ-86-17)

★ ★ ★

கம்பன் கோட்டத்தில் தினமும் மாலை 6மணி முதல் 7மணிவரை அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தி வரும் சமயச் சொற்பொழிவுத்தொடரில் இன்று செஞ்சொற்செல்வர் இரா. செல்வ வடிவேல் கந்த புராணச் சொற்பொழிவை நிகழ்த்தவுள்ளார். (க-4-86-17)


லிடோ இணுவில்

இன்று மட்டும்
அர்ஜுன் - அபிராமி நடிப்பில்
வானவில்
(ரீல்ஸ்)
நாளைமுதல்
உரிமைக்குரல் (ரீல்ஸ்)
தினசரி 10.30, 2.00, 5.00
(90664)



நாகம்ஸ் சுன்னாகம்

அஜித்
(மாறுபட்ட 7வேடங்களில்)
வசுந்தராதாஸ், மீனா நடித்த
சிட்டிசன்
(ரீல்ஸ்) (90533)
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)


# கள்ளக் 'கரண்ட்' எடுத்த 4 பேருக்கு தலா ஐயாயிரம் ரூபா அபராதம்!

யாழ்ப்பாணம்,ஜூலை31

அச்சுவேலிப்பகுதியில் சட்ட விரோதமாக மின் இணைப்புப் பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட நால்வருக்குத் தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் மல்லாகம் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டது.

சட்டவிரோதமாக மின் இணைப்புப் பெற்றதாகக் குற்றஞ்சாட்டி இரு ஆண்களையும் இரு பெண்களையும் அச்சுவேலிப் பொலீஸார் மல்லாகம் நீதிவான் பா. சுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

நால்வரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அவர்களுக்கு ஐயாயிரம் ரூபா அபராதத்தை நீதிவான் விதித்தார். (உ-3)


### கல்வியியற் கல்லூரி டிப்ளோமா ஆசிரியர் சங்கம்
## விசேட பொதுக்கூட்டம்

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் யாழ்.இந்துக் கல்லூரியில் எதிர்வரும் (03.08.2001) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில்

* பட்டமளிப்பு விழாவுக்கான ஒழுங்குகள்
* உயர்கல்வி வாய்ப்புக்கள்
* சங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகள்

என்பன தொடர்பான அவசர கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன.

மேலும் சான்றிதழ் பெறும் பொருட்டு பெயர் விவரங்களை அவசரமாக அனுப்பி வைக்க வேண்டி இருப்பதால் இதுவரை பதிவு செய்யாதவர்கள் இறுதிச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும். அத்துடன் சகல கல்வியியற் கல்லூரி டிப்ளோமாதாரிகளையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

*320, பலாலி வீதி,*
*கந்தர்மடம்.* (90655) - செயலாளர்.


## மரண அறிவித்தல்கள்

### பூவிலிங்கம் சுந்தரலிங்கம் ஜெபதாஸ்

(முன்னாள் மின் இணைப்பாளர்)

இல.3, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பூவிலிங்கம் சுந்தரலிங்கம் ஜெபதாஸ் நேற்று முன்தினம் (29-07-2001) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பூவிலிங்கம் - தங்கரத்தினம் ஆகியோரின் மூத்த மகனும் பற்றிமா இதயமலரின் அன்புக் கணவரும், நைல்ஸ், மில்ஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற அமிர்தலிங்கம் மற்றும் இரவீந்திரலிங்கம் (ஜேர்மனி), சந்திரலிங்கம் (ஜேர்மனி), தியாகலிங்கம் (யாழ்/பாஷையூர் சென். அன்ரனீஸ் றோ.க.ம. வித்தியாலயம்), மனோகரலிங்கம் (கனடா), குலேந்திரலிங்கம் (ஜேர்மனி), ஜெயலிங்கம் (ஜேர்மனி), பாஸ்கரலிங்கம் (கனடா), வசந்தி (கனடா), ஜெயந்தி (மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பேதுருப்பிள்ளை - மரியம்மா (கனடா) ஆகியோரின் மருமகனும் டி. இராஜேஸ்வரி, சிசிலியா (கனடா), யேசுதாஸ் (கனடா), அன்ரனிதாஸ் (கனடா), இதயதாஸ் (கனடா), அமலதாஸ் (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*இல.3, 2 ஆம் ஒழுங்கை,*
*பலாலி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (90659)

தகவல்:
பூ.விக்ரர் தியாகலிங்கம்
(சகோதரன்)

### வல்லிபுரம் ஜெயராஜன் (ரஞ்சன்)

நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும் குளமங்கால் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் ஜெயராஜன் 29.07.2001 ஞாயிற்றுக் கிழமை அன்று இத்தாலியில் அகாலமரணமானார்.

அன்னார் கொன்சியின் (லண்டன்) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கிறிஸ்ரா, கரோலினா மற்றும் கிருஷாந்தன் (லண்டன்), தனுஷியா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குளமங்கால்,*
*மல்லாகம்.* (90661)

தகவல்:
அந்தோனிமுத்து பிலோமினா
(மாமியார்)

### நல்லதம்பி துரைச்சாமி

புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட நல்லதம்பி துரைச்சாமி அவர்கள் 28.07.2001இல் சிவபதமடைந்தார்.

இவர் ஐயம்பிள்ளை நல்லதம்பி - ஆச்சிமுத்து அவர்களின் அன்பு மகனும் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் தில்லையம்பலம் - அன்னபூரணத்தின் அன்பு மருமகனும் சிவநிதி, நவரத்தினராஜா, காலஞ்சென்ற சிங்கராஜா, தர்மரத்தினம் (பிரான்ஸ்), சசிகாந்தன் (பிரான்ஸ்), கலாநிதி (கனடா), திலகவதி (பிரான்ஸ்), குகனேஸ்வரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற கண்ணன் ஆகியோரின் தந்தையும் பொன்னுச்சாமி (காலி), ரூபினி (மட்டக்களப்பு), இதயா (பிரான்ஸ்), சுபாஷினி (பிரான்ஸ்), பரமேஸ்வரன் (ஜேர்மனி), புதுயுகன் (பிரான்ஸ்), சிவானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற செல்லத்துரை, காலஞ்சென்ற செல்லம்மா (மலேசியா), கணேசன் (கனடா), பொன்னம்மா (கனடா), பொன்னையா (கொழும்பு), டாக்டர் கந்தையா (கொழும்பு), காலஞ்சென்ற நாகம்மா, கனகம்மா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரரும் நடராஜா, ரட்ணம் மரகதம் (கனடா), இராசம்மா (கனடா), ஆகியோரின் அன்பு மைத்துனரும் கௌசல்யா (நோர்வே), நிஷாந்தினி (இந்தியா), கஜேந்திரன் (கனடா), விநோதினி (கொழும்பு), சிந்து, (மட்டக்களப்பு), கெவின், சுவேதினா, செறின் (பிரான்ஸ்), தர்ஷிகா, கார்த்திகா (கனடா), ஹரிஹரன் (பிரான்ஸ்), அநோஜன், சியாம்சி (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் மதுமிளாவின் (நோர்வே) பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2001) செவ்வாய்க்கிழமை இல.99/7, பிறவுண் வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாலை 2.00 மணியளவில் கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*99/7, பிறவுண் வீதி,*
*நீராவியடி.* (C/17645)

தகவல்:
பொன்னம்மா (மனைவி),
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# ஆஸிக்கு ஆள் கடத்தும் முயற்சி தோல்வியில்

கொழும்பு ஜூலை31

நீர்கொழும்பிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு 20 இளைஞர்களைப் படகு மூலம் - சட்டவிரோதமாக - அழைத்துச் செல்லும் முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு 20 இளைஞர்களுடன் படகு ஒன்று நீர் கொழும்பிலிருந்து ஆஸ்திரேலியா நோக்கிப் புறப்பட்டதாகவும் -

மறுநாள் படகில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாகப் படகு கரையைநோக்கித் திரும்பியதாகவும் -

அச்சமயம் கரைக்குச் சமீபமாகப் பணியில் இருந்த பொலீஸார் படகைக் கைப்பற்றியதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

படகில் இருந்த இளைஞர்களையும் படகோட்டிகளையும் பொலீஸார் விசாரணை செய்து வருகின்றனர். (உ-3)

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற - அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் - சம்பிக ரணவக்க ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

புலிகளுக்கு எதிரான யுத்தத்தைத் தீவிரப்படுத்த வேண்டும் என்றும் அந்தக் குழு ஜனாதிபதியிடம் கோரியது.

அதேவேளை இன்று ஜனாதிபதியை ஜே.வி.பி. தூதுக்குழு சந்திக்கின்றது.

சர்வஜன வாக்கெடுப்பு முயற்சியைக் கைவிட்டு நாடாளுமன்றத்தைக் கூட்டும்படி அந்தக் கட்சியும் ஜனாதிபதியிடம் கோரவிருக்கின்றது. என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## பிரேத பரிசோதனை அநுராதபுரத்தில்

மன்னார் ஜூலை31

மன்னார் பள்ளிமுனையில் நேற்று முன்தினம் வீடு ஒன்றில் சத்திமிக்க குண்டொன்று வெடித்ததில் உயிரிழந்த இருவரின் சடலங்களையும் பிரேத பரிசோதனைக்காக அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு மன்னார் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சடலங்கள் மீதான பிரேத பரிசோதனையை அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் மேற்கொள்ளும்படியும் -

அதன்பின்னர் சடலங்களை அங்கேயே புதைக்கும்படியும் - நீதிவான் உத்தரவிட்டார். (உ-3)

## சர்வஜன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் எதிராகவுள்ளார்.

அரசமைப்பை மாற்ற இரு தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவைதடுக்கப்பட்டன. தற்சமயம் மூன்றாவது தடவையாக முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. இந்த முயற்சியும் எதிர்பார்ப்புக்குள்ளாகின்றது.

சகல சிறுபான்மையினரது உரிமைகளுக்கும் பாதுகாப்பளிக்கும் அரசமைப்பை நடைமுறைப்படுத்துகின்ற முயற்சியை அரசு கைவிடமாட்டாது. இதன் மூலம் பிரபாகரனின் பிடியில் இருந்து தமிழ் மக்கள் விடுவிக்கப்படுவார்கள்.

நாட்டில் யுத்தம் நடைபெறுகின்ற போதும், பேச்சுக்கான பாதை திறந்தே உள்ளது. பல யுத்தங்கள் பேச்சு மூலம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. தற்போதைய நெருக்கடிகள் அரசியல் தீர்வு மூலம் முடிவுக்குக் கொண்டு வரப்படும் - என்றார் அவர். (உ-3-9)

# சமாதானம் ஏற்படால்தா[...] நாட்டை அபிவிருத்தி செய்[...]

## அமைச்சர் றொனி டிமெல் க[...]

நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு விரைவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்று துறைமுக அபிவிருத்தி, தெற்கு அபிவிருத்தி அமைச்சர் றொனி டி மெல் தெரிவித்துள்ளார்.

[...]துறை மாவட்[...] கு[...]ருக்கு கட[...] க[...]ங்கும் கை[...] க[...]கொண்டு உ[...] வைலேயே அவர் [...]கனர்.

## சர்வஜன வாக்கெடுப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றப்படும் என்று அடித்துக் கூறி வந்ததையும் -

கடைசி நேரத்தில் அரசு அந்தத் திட்டத்தைக் கைவிட்டு, முயற்சியிலிருந்து வாபஸானதையும் -

இந்த வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

அதேமாதிரி, இந்த சர்வஜன வாக்கெடுப்பு விடயத்திலும் - மக்கள் எதிர்ப்பு அதிகரித்து வருவதால் - அரசு கடைசி நேரத்தில் பின்வாங்குவதற்கான அறிகுறிகள் இப்போதே தென்படத் தொடங்கியிருப்பதாக அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

எண்ணும் திட்டமிட்டபடி சர்வஜன வாக்கெடுப்பு ஓகஸ்ட் 21 இல் நடத்தப்படும் என்று ஜனாதிபதியுடன் நெருங்கிய சில மூத்த அமைச்சர்கள் அடித்துக் கூறிவருவதாக வேறு சில செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

"சர்வஜன வாக்கெடுப்பைக் கைவிட அரசு திட்டம்" என்ற தலைப்பில் 'Colombo Page' இணையத்தளம் நேற்று இது குறித்து வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

ஓகஸ்ட் 21 ஆம் திகதி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ள [...]ஜன வாக்கெடுப்[...] [...]அரசியல் [...]விமர்சனங்க[...] [...] கைவிடுவதற்கு [...] வருகின்றது.

சிரேஷ்ட அமை[...] [...]கையானோர் சர்[...] [...]ப்பை எதிர்ப்பதா[...] [...] வாக்குக்கு [...]சாரம் செய்வதற்கு [...] ஆளும் பொது[...] [...] முன்னணியின் [...]கள் கூறுகின்ற[...]

பேராசிரியர் ஜி[...] எஸ்.பி. திஸநாயக்[...] விஜயசேகர, நந்திமி[...] [...]க்க, ஆறுமுகம் [...] [...]அரசிறி தொடங்க[...] [...] அமைச்சர்கள் [...] வாக்கெடுப்புக்கு [...]சாரம் செய்ய மறுப்[...] [...]வாரங்களுக்கு மு[...] [...]யகமாகச் செய்தி [...]தோம்.

"நாடாளுமன்றத்[...] இரண்டு பங்கு [...] பின் ஆதரவு பெற[...] அரச மைப்பை அ[...] வதன் சட்டவலு [...] அமைச்சரவைக் [...] ஜனாதிபதியும் அ[...] [...]ரம் சூடான வாத[...] வாக்குவாதத்தில் [...] - என்று சிரேஷ்[...] ஒருவர் கூறினார்.

இதேவேளை - [...]

அரசுக்கு எதி[...] கட்சிகள் கூட்டுப் [...] வதால் எதிர்வரு[...] வாக்கெடுப்பில் அ[...] மிகக் கஷ்டமானத[...] சுதந்திரக் க[...] செயலாளர் எஸ்.பி[...] பிரதமருக்கு எழு[...] தத்தில் தெரிவித்து[...] என்ற சாரப்பட 35[...] களைத்தான் அரசு[...] கொள்ள முடியும் [...] அந்தக் கடிதத்தில்[...] ருக்கின்றார்.

- சர்வஜன வா[...] ஒத்தி வைப்பதற்[...] கள் குறித்து அரச[...] மாக ஆலோசித்[...] இப்போது கூறப்ப[...]

"சர்வஜன வா[...] ஒத்தி வைப்பது [...] சாத்தியப் பாடுகளு[...] கள் உண்டு" என[...] சரத் அமுனுகம [...]

- இப்படி அ[...] நிறுவனம் தெரிவி[...]


வெளிவந்துவிட்டது

நாணயமாற்றுவீதம்

பொருளியல் நூல்

(90663) ஆசிரியர்: வே.கருணாகரன்

உ

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய

சப்பற வெள்ளோட்டப் பெருவிழா

காலம்:- 01-08-2001 புதன்கிழமை காலை 9.05மணி முதல் காலை 10.00மணி வரையும் உள்ள கன்னி லக்கின சுபவேளையில் சப்பற வெள்ளோட்டம நடைபெறும்.

அருளாசியுரை:- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.
இரண்டாவது குருமகா சந்நிதானம்,
நல்லை ஆதீனம்.

விசேட மங்களஇசை:- கலாபூஷணம்
கே.ஆர்.சுந்தரமூர்த்தி குழுவினர்.
மங்கள இசை:- திரு.வ.செல்வராசா குழுவினர்.

அன்று நள்ளிரவு 12.00மணிக்கு அம்பாள் பெரிய சப்பறத்தில் திருவீதி உலாவருவாள். அம்பிகையின் அருட்கடாட்சம் பெறவருமாறு அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புதிய சப்பற வெள்ளோட்டத்தை முன்னிட்டு நாளைய உதயனில் முழுப் பக்கத்தில் வெள்ளோட்டவிழா சிறப்புமலர் வெளிவர உள்ளது.

(C/17633) - சப்பறத்திருவிழா உபயகாரர்கள்.

பாராட்டிக் கௌரவிக்கின்றோம்

எமது கழகத்தைச் சார்ந்த செல்வி சுப்பிரமணியம் சிவகௌரி அவர்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற வலைப்பந்தாட்ட போட்டியில் யாழ்.மாவட்ட அணிக்காகப் பங்குபற்றி, வடக்கு - கிழக்கு மாகாண அணிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அத்துடன் செல்வி செல்வராசா தயாளினி அவர்கள் பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற வடக்கு - கிழக்கு மாகாண அணிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அத்துடன் செல்வி செல்வராசா தயாளினி அவர்கள் பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற வடக்கு - கிழக்கு மாகாண தடகள போட்டியில் 19 வயதிற்கு மேற்பட்ட பிரிவில் உயரம் பாய்தலில் முதலாவது இடத்தையும் (புதிய சாதனை நிலைநாட்டப்பட்டது) 400 M ஓட்டத்தில் முதலாவது இடத்தையும் 200M ஓட்டத்தில் முதலாவது இடத்தினையும் பெற்றார். செல்வி தங்கராசா சாந்தநாயகி அவர்கள் 100 M தடைதாண்டி ஓட்டத்தில் முதலாவது இடத்தினைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். மேற்படி மூன்று வீராங் கனைகளையும் பாராட்டிக் கௌரவிக்கின்றோம்.

(C/17647) -பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்.

VIDEO EDITING VIDEO EDITING VIDEO EDITING VIDEO EDITING VIDEO EDITING VIDEO EDITING VIDEO

VIDEO EDITING பயிற்சி நெறி



கணனி மூலம் வீடியோ எடிற்றிங் / ரைற்றில் CD இல் பதிவு செய்தல் / ஓடியோ றெக்கோடிங்கில் புதிய உத்திகள் போன்றவற்றிக்கானசெயல் முறை பயிற்சி வகுப்புக்கள்ஆரம்பமாகவுள்ளன.

விபரங்களுக்கு ☞ Kingston Computer Division
Kingston Electronics
37, Clock Tower Road,
Jaffna.
T.P: 021-3140




COMPUTER SALE

● PENTIUM IV 1.4 G HZ
● PENTIUM III 800, 933, 1000MHZ
● PENTIUM I 233 MHZ

UPS, MONITOR, PRINTER, SCANNER, HARD DRIVE, CD DRIVE FLOPY DRIVE, 4 WAY SUB WOOFER, 32 MB VGA Card With TV Out மற்றும் அனைத்து உதிரிப்பாகங்கட்கும் உங்கள் தெரிவு

KINGSTON ELECTRONICS
No 37, CLOCK TOWER ROAD,
JAFFNA.
T.P: 021-3140

ஏது [...] வீடியோ CD [...]
★ விக்ரம், லை[...] நடி[...]
பிரதிகள் உ[...]
வீடியோ[...] யாழ்ப்[...]
(C/17646)

A/L 20[...]
திரு. S.[...]
(B.Com. (Hons)[...]
தொடர்[...]
ஆரம்பம்:- 01.08.2001 புதன் காலை 8.15 [...]
திகழ் கல்வி [...]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.07.2001 வெளியிடப்பெற்றது.